ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை

| மலர் 33 | ஆகஸ்டு 1969 | இதழ் 8 |
| --- | --- | --- |

# வேலையில்லாக் கொடுமையை வளர்க்கும் திட்டம்

ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்னர், அப்போது தமிழக அரசின் கல்வி அமைச்சராக இருந்த திருவாளர் மாதவன் அவர்கள், அடுத்த கல்வி ஆண்டிலிருந்து முதல் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரையுள்ள எல்லா வகுப்புகளுக்கும் எல்லாப் பாடங்களுக்கும் உரிய நூல்களைத் தமிழக அரசே வெளியிட இருக்கிறது என்னும் செய்தியை அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் பதிவு பெற்றுள்ள பாட நூல் வெளியீட்டாளர்கள் 730க்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் இந்தச் செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது

அவர்களுக்கு மட்டுமல்ல. அந்நூல் வெளியீட்டகங்களில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான அலுவலர்கள், ஆயிரக்கணக்கான நூலாசி

-ரியர்கள், அச்சுத் தொழிலாளர்கள், நூல் கட்டிடத் தொழிலாளர்கள் (Binders), ஓவியர்கள், ஓவியத்தகடு உருவாக்குபவர்கள் (Block Makers), காகித வணிகர்கள் முதலிய பல்வேறு திறத்தினர்க்கும் இச் செய்தி வியப்பையும் அதிர்ச்சியையும் ஒருங்கே அளிப்பதாக அமைந்துள்ளது.

முதல் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை உள்ள எல்லா வகுப்புகளின் எல்லாப் பாட நூல்களையும் தேசிய மயமாக்குவது என்னும் இக் கொள்கை நடைமுறைக்கு வருமானால், அதன் விளைவாக, ஆயிரமாயிரம் மக்கள் வேலையை இழந்து வேதனைக்கு ஆளாகி அல்லற் படுவர் என்பதில் துளியும் ஐயமில்லை. சென்ற இருபது ஆண்டுகளில் நம் நாட்டில் எத்தனையோ தொழில்கள் தேசியமயம் ஆக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அத் தொழில்கள் தேசிய மயமாக்கப்படுவதற்கும் பாட நூல்கள் தேசியமயம் ஆக்கப்படுவதற்கும் இடையே ஓர் அடிப்படையான வேறுபாடு இருக்கிறது. அத்தொழில்கள் தேசியமயம் ஆக்கப்படும் போது, அதன் விளைவாக, அத் தொழில்களில் பணிபுரிவோரில் ஒருவர்கூட வேலையிழக்கும் நிலை ஏற்படுவதில்லை. ஆனால் பாட நூல்கள் தேசிய மயம் ஆக்கப்பட்டாலோ, அதன் விளைவாக, பல்லாயிரம் பேர் வேலையை இழப்பர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, உயிர் ஈட்டுத் தொழிலை (Life Insurance) அரசாங்கமே எடுத்துக் கொண்டது. அப்படி எடுத்துக் கொண்டபோது, அதற்கு முன்னர் தனியார் துறை உயிர் ஈட்டுறுதிக் கம்பெனிகளில் பணிபுரிந்து கொண்டிருந்த அத்தனை பேரையும்—ஒருவர் தவறாமல்—அரசாங்கம் தொடர்ந்து வேலையில் அமர்த்திக் கொண்டது.

அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு, இரயில்வே கம்பெனிகள் அனைத்தையும் அரசாங்கம் தன் உடைமை ஆக்கிக் கொண்டது. அப்போதும் அப்படித்தான் அரசாங்கம் அக் கம்பெனிகளில் பணியாற்றி வந்த அனைவரையும் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொண்டது.

எந்தத் தொழிலை அரசாங்கம் மேற் கொண்டாலும், அதன் ஊழியர்களைப் பொறுத்தவரை அரசாங்கம் கையாள்கிற நடைமுறை இதுதான். ஆனால் பாட நூல் தொழிலைப் பொறுத்தவரை அரசாங்கம் இந் நடைமுறையைப் பின்பற்ற இயலாது. ஏனெனில் இத் துறையைத் தேசிய

மயம் ஆக்கும்போது அரசாங்கம் எடுத்துக் கொள்வது, பாட நூல்களை மட்டும்தான் ; பாட நூல் வெளியீட்டகங்களை அல்ல.

பாட நூல் வெளியீட்டுத் தொழிலை அரசு மேற் கொள்ளுமானால், இப்போது அத்துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களில் பத்து சதவீதத் தினருக்குக்கூட அரசினரால் வேலை அளிக்க இயலாது. ஏனைய தொண்ணூறு சத வீதத்தினர் வேலையை இழந்து திண்டாடித் தத்தளிப்பர் என்பது உறுதி.

நூல் வெளியீட்டுத் தொழில் தனியார் துறையில் இருக்கிற இன்றைய நிலையில், ஒவ்வொரு வகுப்பின் ஒவ்வொரு பாடத்திற்கும் பல்வேறு வெளியீட்டாளர்கள் பல்வேறு நூல்களை எழுதச் செய்து வெளியிடுகின்றனர். அப்படிச் செய்வதால், நூல் எழுதும் வாய்ப்பு, ஆயிரக் கணக்கான ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. ஆனால் அரசாங்கமே நூல்களை வெளியிடுமானால் ஒவ்வொரு வகுப்பின் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு நூல் மட்டும் தானே வெளியாகும்? அப்படி வெளியானால், நூல் எழுதும் வாய்ப்பும் ஒவ்வொரு ஆசிரியருக்கு மட்டும்தானே கிடைக்கும்? ஏனைய ஆசிரியர்களுக்கெல்லாம் அந்த வாய்ப்பு கிடைக்காமல்தானே போகும்?

இந்த நாட்டில் ஆசிரியப் பெரு மக்களுக்கு அளிக்கப்படும் ஊதியம், நியாயமாக அளிக்கப்பட வேண்டிய அளவில் இல்லை என்பதும், மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பதும் அனைவரும் அறிந்த உண்மைகள். ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற ஊதிய அளவை உயர்த்துவது தான் நியாயம் — உயர்த்தத்தான் விரும்புகிறோம்—ஆனால் உயர்த்த இயலவில்லை—காரணம், அரசாங்கத்திடம் போதிய நிதி வசதி இல்லாததே என்று அமைச்சர் பெருமக்கள் அடிக்கடி விளக்கம் தருவதையும் நாடு காண்கிறது. இத்தகைய சூழ்நிலையில், ஆசிரியப் பெருமக்களில் ஒரு சாராருக்குத், துணை வருமானத்தை அளித்துக் கொண்டிருக்கும் நூல் எழுதும் வாய்ப்பையும் ஏன் அவர்களிடமிருந்து பறித்துவிட வேண்டும்? பறித்து விடுவது எப்படி நியாயமாகும்?

பாட நூல் வெளியீட்டகங்களில் நேரடியாகப் பணிபுரிவோர் ஏறத்தாழ ஐயாயிரம் பேர் உள்ளனர். பதிப்பக அலுவல்கள், எழுத்தர் பணிகள், வெளியூர் சென்று புத்தகங்களின் விற்பனையைப் பெருக்குதல் முதலிய பல்வேறு பணிகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பலர் நீண்ட பல ஆண்டுகளாக இதே துறையில் பணியாற்றி வருபவர்

கள். இவர்களிற் பெரும்பாலோர், கல்லூரிக் கல்வியைப் பெறுதவர்கள்; உயர்நிலைப் பள்ளிக் கல்வியைக்கூட படிக்காதவர்கள். நெடுங்காலமாக இத்துறையில் பணியாற்றிவிட்ட இவர்கள், இனி வேறு துறைகளுக்குச் சென்று பணி தேடிக் கொள்வது எளிதில் இயலாத செயல். வேறு துறைகளில் வேலை கிடைப்பதும் மிகமிக அரிது.

அரசாங்கம் கொண்டுவரும் புதிய திட்டம் எதுவாக இருந்தாலும், அது, நாட்டின் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதாக இருக்க வேண்டும். அதிகப்படுத்துவது இல்லாவிட்டாலும், இருக்கின்ற வேலை வாய்ப்புகளைக் குறைக்காமலாவது இருக்கவேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகி அல்லற்படுகிற மக்கள் இப்போதே ஏராளமாக இருக்கிறர்கள். இந்நிலையில் அத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு உரிய திட்டங்களைத் தீட்டுவதுதான் அரசாங்கத்தின் கடமையே தவிர அதனை அதிகப் படுத்தும் இயல்புடைய திட்டங்களைத் தீட்டுவது துளியளவும் நியாயமாகாது. பாட நூல்களைத் தேசிய மயமாக்கும் திட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தும் தன்மையது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இத் திட்டம் நடைமுறைக்கு வருமாறல் இத் தொழிலில் நேர்முகமாக ஈடுபட்டுள்ள 5000 பேரும் அவர்களுடைய குடும்பங்களுமாக ஏறத்தாழ இருபதினாயிரம் பேரைப் பசியும் பட்டினியும் வதைத் தெடுக்கும் என்பது வேதனை நிறைந்த உண்மை. பாட நூல்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தைப் பற்றிய இறுதி முடிவை எடுக்கும் முன்பு, அரசினர், மிக முக்கியமான இந்த உண்மையை ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறு நூல்களை வெவ்வேறு நூல் வெளியீட்டாளர்கள் வெளியிடுகிற இன்றைய நிலை தொடர்ந்து இருந்தால்தான், தலைமை ஆசிரியர்களும் ஏனைய ஆசிரியர்களும், தத்தம் வட்டாரத்துச் சூழ்நிலைகளுக்கும் அங்குள்ள மாணவர்களின் மனநிலைக்கும் அறிவுத் திறனுக்கும் ஏற்ற நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தத்தம் பள்ளிகளில் பயன்படுத்த முடியும். தமிழகம் முழுவதிலும் அரசு வெளியிடுகிற ஒரே நூல் தான் பாட நூல் என்கிற நிலை இருக்குமாறல், இவ்வாறு சிறந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிற உரிமை ஆசிரியர்களுக்கு இல்லாமற் போகும். ஆசிரியர்களுக்குப் பிடிக்கிறதோ

இல்லையோ, அந்தந்த வட்டாரத்துச் சூழ்நிலைக்கு ஏற்றதாக் இருக்கிறதோ அல்லவோ, அரசாங்கம் வெளியிட்ட நூலைத்தான் கையாள வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டுவிடும். கல்வியின் சிறப்பான வளர்ச்சிக்கு இத்தகைய சூழ்நிலை சிறிதும் துணைபுரியாது.

பாடநூல்களை மட்டுமல்ல, பாடதிட்டத்தைக்கூட அந்தந்த வட்டாரத்திற்கு ஏற்றமுறையில் மாற்றி அமைத்துக் கொள்ளும் உரிமை அந்தந்த வட்டாரத்து ஆசிரியர்களுக்குத் தரப்படவேண்டும் என்னும் கருத்து, மேல் நாடுகளில் செல்வாக்குப் பெற்று வருகிற காலம் இது. இக் கருத்து, அமெரிக்காவின் பல பகுதிகளில் மனமார ஏற்கப்பட்டு மகிழ்வோடு பின்பற்றப்பட்டும் வருகிறது. நாடு முழுவதிலும் ஒரு வகுப்புக்கு ஒரே பாட நூல் என்னும் நிலை, கல்வி வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஒவ்வாத நிலை என்பதைக் கல்வித் துறை வல்லுநர்கள் யாவரும் ஒருமுகமாக ஏற்றுக் கொள்கின்றனர். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பாடநூல்களைத் தேசிய மயமாக்குவது எவ்வளவு தவருன ஓர் ஏற்பாடு என்பது வெள்ளிடை மலையென விளங்கும்.

தனியார் துறைப் பாடநூல் வெளியீட்டாளர்கள் பாட நூல்களை வெளியிடுவதோடு, மற்ருேர் அருமையான கல்விப் பணியை ஆற்றிவருகின்றனர். பதிவு பெற்றுள்ள பாடநூல் வெளியீட்டாளர்கள் 730க்கு மேற்பட்டவர்கள் இப்போது தமிழகத்தில் உள்ளனர் அல்லவா? அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான துணைப் பாட நூல்களையும் பற்பல பொதுத்துறை நூல்களையும் வெளியிட்டு வருகின்றனர். புதியன புனைந்த அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள், சுவையும் பயனும் மிகுந்த இலக்கிய விளக்கங்கள், பெற்ற பொன்னுட்டின் புகழ் மிகுந்த தலைவர்களின் தொண்டுகள் முதலிய பல்வேறு பொருள்கள் பற்றிய மாணவர்களின் நாட்டுப் பற்றையும் அறிவுத் தாகத்தையும் விளக்க வல்ல நூற்றுக் கணக்கான நூல்கள் இவ்வாறு வெளியாகி வருகின்றன. இத்தகைய நூல்கள் தாம், தமிழகத்தில் இப்போதுள்ள இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட உயர் நிலைப் பள்ளிகளின் நூல் நிலையங்களில் இடம் பெற்று, மாணவர்களுக்கு மிகுந்த பயனை அளித்து வருகின்றன. எழிலும் ஏற்றமும் மிகுந்த இத்தகு நூல்களை வெளியிட்டுப் பயனும் பண்பும் மிகுந்த பணியாற்றிவரும் பாட நூல் வெளியீட்டாளர்கள் அழிக்கப்பட்டால், பள்ளிக்கூட நூல் நிலையங்களுக்குத் தேவையான நூற்றுக் கணக்கான

பொது நூல்களை ஆண்டு தோறும் அரசே வெளியிட இயலுமா? அப்படி இயலாது என்றால், ஒழுக்கத்தை வளர்க்கும் உயரிய நூல்கள் இடம் பெற வேண்டிய பள்ளிக்கூட நூலகங்களில் சிறுவர்கள் படிக்கக் கூடாத நாவல்களும் மர்மக் கதைகளும் இடம் பெறும் அவல நிலை தானே உருவாகும்?

தமிழ் நாட்டில் தனியார் துறையினர் வெளியிட்டுவரும் பாடநூல்கள், தமிழ் நாட்டுப் பாட நூற்குழுவினரின் கடுமையான தணிக்கை காரணமாகவும், நூல் வெளியீட்டாளர்களின் போட்டி மனப்பான்மை காரணமாகவும், கருத்து, ஓவியம், அச்சு, தோற்றம் முதலிய எல்லாப் பகுதிகளிலும் தரம் உயர்ந்தனவாகத் திகழ்கின்றன என்று இந்தியப் பேரரசே பாராட்டியுள்ளது. இம்முறையில் தமிழகத்திற்குப் பெருமையையும் புகழையும் தேடித்தருகிற நூல் வெளியீட்டாளரின் நற்பணி தொடர்ந்து நடப்பதைத் தமிழக அரசு ஏன் தடுக்கவேண்டும்? நடுநிலை உணர்வு படைத்த நல்லறிஞர் எவரும் இத்தகைய கேள்வியை எழுப்புவது இயல்பே அல்லவா?

''தேசிய மயமாக்கப்படும் பாட நூலில்,'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்னும் முது மொழிக்கு இணங்க, ஏதேனும் ஒரு செய்திப் பிழை ஏற்பட்டுவிட்டால், அது அந்த நூலை ஒவ்வோராண்டும் பயிலும் இலட்சக் கணக்கான குழந்தைகள் மனத்திற் பதிந்துவிடக்கூடிய அபாயம் உண்டு. தனியார் வெளியிடும் நூலில் அத்தகைய பிழை ஏற்படுமாயின் அது சில ஆயிரம் குழந்தைகளை மட்டுமே பாதிக்கும்.'' என்று, தென்னிந்தியப் பதிப்பாளர் சங்கம், அமைச்சர் பெருமக்களுக்குச் சமர்ப்பித்துள்ள வேண்டுகோளில் தெரிவித்திருப்பது முற்றிலும் உண்மை. தமிழகம் முழுவதும் ஓரே நூல் என்கிற நிலை ஏற்படும்போது, அந்த நூலிற் காணப்படக்கூடிய பிழைகளால் ஏற்படும் கெடுதி, மாபெரும் அளவுடைய'தாக அமையும் என்பதில் ஐயம் எப்படி இருக்க முடியும்?

தனியார் வெளியிடும் பாடநூல்களின் விலை மிகக் கூடுதலாக இருக்கிறது என்பது போன்ற ஒரு குற்றச்சாட்டைப் பொதுப்படையான முறையில் சிலர் சில நேரங்களில் எழுப்புவது உண்டு. யாரேனும் சில பதிப்பாளர்கள் வெளியிடும் சில நூல்களின் விலை கூடுதலாக இருக்குமானால் அதனைக் குறைப்பதற்கு உரிய உத்தரவை அரசு பிறப்பிக்கலாம். அது நியாயம். ஆனால் சில வெளியீட்டாளர்களின் சில நூல்களின் விலை அதிகமாக இருக்கிறது என்னும் காரணத்திற்காகப் பாட நூல் வெளி

யீட்டுத் துறை முழுவதையுமே அரசு மேற்கொள்வது எவ்வாறு நியாய மாகும் ?

எல்லாத் தொழில்களையும் அரசே நடத்த வேண்டும் என்னும் அடிப்படையை ஏற்றுக்கொண்டுள்ள கம்யூனிசு நாடு சோவியத் ரஷ்யா. அந்த ஒரு நாட்டைத் தவிர, முன்னணியில் உள்ள பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் முதலிய எல்லா நாடுகளிலும் பாட நூல் வெளி யீட்டுத் தொழில் தனியார் துறையிடமே விடப்பட்டுள்ளது. அப்படி விடப்படுவதுதான் கல்வியின் வளர்ச்சிக்கும் நாட்டின் செழிப்புக்கும் உரிய சிறந்த முறை என்னும் கருத்து அங்குள்ள அரசுகளால் ஒரு முகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கல்வித் துறையில் ஓங்கி உயர்ந்து சிறந்து பொலிகிற அந்நாடுகளின் இந்நடைமுறையை, அத் துறையில் மெல்ல மெல்ல முன்னேறிக் கொண்டிருக்கும் நாமும் ஏன் பின்பற்றக் கூடாது ?

எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, பள்ளிப் பாட நூல்கள் அனைத்தையும் தேசிய மயமாக்குவது என்னும் நடைமுறை யால் ஏற்படக்கூடிய நன்மையைவிடத் தீமையே அதிகம் என்பது, தெள்ளத் தெளிவாக விளங்குகிற உண்மை. எனவே ஏற்கெனவே அரசு வெளியிட்டுவருகிற ஒன்று முதல் எட்டுவரை உள்ள வகுப்புகளுக்கான தமிழ்—ஆங்கிலம் பாட நூல்களைத் தவிர, ஏனைய பாட நூல்களைத் தேசிய மயமாக்கும் எண்ணத்தை அரசு அன்பு கூர்ந்து கைவிட வேண்டும் என்று அன்புடனும் பணிவுடனும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக அமைச்சரவையினர், இப்பிரச்சினையில் அவசரப்பட்டு எத்தகைய முடிவுக்கும் வந்துவிடாமல், ஆற அமர இருந்து, பிரச்சினை முழுவதையும் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து, அதன் பின்னரே முடிவு எடுக்கவேண்டும் என்பதே நம் ஆசை; பதிப்பாளர்கள் அனைவருடைய ஆசையும் அதுவே.

———

# எய்டட் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளுக்கு ஓர் வேண்டுகோள்

❋

*சமீபத்தில் அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள, பத்து அங்கத்தினர்கள் கொண்ட குழுவின் முழுவிவரத்தை இம்மாத ஆரம்பக் கல்வியில் பிரசுரித்துள்ளோம். அதை மாவட்டங்களிலுள்ள சங்கத்தினர் உடனடியாகக் கூட்டங்கூட்டி இந்த உத்தரவை விவாதித்து, தங்கள் அபிப்பிராயத்தை கனம் கல்வி மந்திரிக்கு ஒரு நகலும் பாடசாலை கல்வி இயக்குநருக்கு* (D.P.I.) *ஒரு நகலும் மாகாணசங்கத்திற்கு ஒரு நகலும் உடனடியாக அனுப்பிவைக்கவும்.*

*மாவட்ட சங்கத்தின் தலைவர், உபதலைவர், காரியதரிசி, நிர்வாகக் குழுவிலுள்ள அங்கத்தினர்களின் பெயர் விலாசம் முதலியவைகளைக் குறித்து ஒரு நகல் மாகாண சங்கத்திற்கு அனுப்பிவைக்கவும். விரைவில் எய்டட் பள்ளி மாநில மாநாடு கூட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். முழுவிவரங்கள் தேவை.*

**P. வீரராகவன்,**

தலைவர்,

தமிழ்நாடு எய்டட் ஆரம்பப் பள்ளி

நிர்வாகிகள் சங்கம்,

(ஆரம்பக் கல்வி நிலையம்),

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

## ABSTRACT

Education — Elementary and Secondary — Questions relating to aided schools — constitution of a committee — orders passed.

---

## EDUCATION DEPARTMENT

G. O. Ms. No. 848. Dated 18—6—69.

ORDER :

1. The Government hereby constitute a committee with the following members to go into the various questions relating the aided elementary and Secondary schools in this State including service conditions of teachers :

| | | |
|---|---|---|
| 1. | Secretary to Government, Education Department | Chairman |
| 2. | Director of School Education | Member |
| 3. | Director of College Education | ,, |
| 4. | Thiru A. V. Joseph, Deputy Secretary to Govt. Finance Department | ,, |
| 5. | Thiru G. Krishnamoorthy, M. L. C. | ,, |
| 6. | Thiru J. R. Alwar, Correspondent, Muthialpet High School | ,, |
| 7. | Thiru A. K. Sitharaman, President, S. I. Teachers' Union | ,, |
| 8. | Thiru S. Narasimhan, Chairman, City Headmasters' Association and Correspondent, M. Ct. M. High Schools | ,, |
| 9 | Thiru S. Meenakshisundara Mudaliar, Correspondent, Kalaimagal Kalvi Nilayam, Erode | ,, |
| 10. | Thiru R. Shanmugam, Deputy Director of School Education | ,, |

The committee will have power to co-opt members.

2. The terms of reference of the committee will be as follows:

I. To make recommendations regarding:

(a) the compositions of managing bodies for schools, functions and responsibilities, qualification for membership, financial stability etc.

(b) the appointment of Correspondents, their qualification, *the tenure of their office and their powers* and responsibilities and

(c) the manner and condition of the recognition of managing bodies and correspondents by Government, the powers that should be vested with Government for their control including dissolution of managing bodies or removal of members on disciplinary grounds, disqualifyning a correspondent, constitution of new committees and appointment of new correspondents, on forcing the obsevrance of Government rules and directives by the management and the correspondent and ensuring the normal working of the sehool including direct payment to the teachers when the Correspondentship is under dispute and he is otherwise not functioning.

II. (d) the recommendations regarding the procedure to be followed and condition to be laid down for the recognition of schools.

III. To make recommendations regarding:—

(a) the powers of the management regarding recruitment, promotion and discipline of teachers;

(b) the procedure to be followed for and the condition such as tenure of the appointment, its nature etc. that should apply to such appointments and promotion;

(c) laying down clear service rules for teachers and the desirability of applying the Madras Civil Service (C. C. & A.) rules applicable to Government servants to teachers in elementary and high schools under all managements in preference to the form of agreement that now exists;

IV. To make recommendations regarding :—

(a) the powers to be vested with Government to enforce service rules on managements and teachers; and

(b) the procedure to settle disputes managements and teachers—arbitration or judicial or departmental and the advantages and disadvantages of following either of the three methods and the machinery needed for the same.

V. To make recommendation regarding the disirability or otherwise of having common scales of pay, service rules, leave rules, service and retirement benefits of the various categories of teachers under all managements after a thorough study of the existing rules and regulations regarding the same;

VI. To examine the advantages and disadvantages of making the rules relating to Elementary and High Schools statutory and partly executive or fully executive and make suitable recommendations thereon; and

(if the rules are to be partly statutory and partly executive, it may clearly be indicated as to what rules should be statutory and what should be executive in character).

VII. To make recommendations regarding a suitable conduct rules for teachers, particularly the desirability or otherwise of extension the application of Government servants conduct rules to teachers under all managements.

3. The committee is requested to submit its report within three months.

# உதவி பெறும் ஆரம்பக்கல்வி, உயர்தரக் கல்வி, பாடசாலைகளின் சீர்திருத்தக் குழு

## G. M. No. 848 — 18-6-69

1. கீழ்க் கண்ட பத்து அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு குழு அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு இருக்கிறது.

(1) கல்வி இலாகா காரியதரிசி (தலைவர்)

(2) பாடசாலை கல்வி இயக்குனர்.

(3) காலேஜ் கல்வி இயக்குனர்.

(4) திரு. A. V. ஜோஸப், நிதி இலாகா காரியதரிசி

(5) திரு. G. கிருஷ்ண மூர்த்தி M.L.C.

(6) திரு. J. R. ஆள்வார் நாயுடு (முத்தியால் பேட்டை, உயர்நிலைப் பள்ளி நிர்வாகி)

(7) திரு. A.K. சீதாராமன் (தென் இந்திய ஆசிரியர் சங்கத் தலைவர்)

(8) திரு. S. நரசிம்மன் (நகரத் தலைமை ஆசிரியர் சங்கத் தலைவர்)

(9) திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் (நிர்வாகி, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு)

(10) திரு. R. ஷண்முகம் (கல்வி இலாகா உதவி டைரக்டர்)

இந்த அங்கத்தினர்களோடு வேறு சில அங்கத்தினர்களையும் சேர்த்துக் கொள்ள இக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

I. இந்தக் குழு கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி யோசனை கூறும்.

II. (a) பாடசாலை நிர்வாகம் செய்வது எப்படி அமைதல் வேண்டும். பாடசாலைக் குழுவின் அங்கத்தினர்களின் தகுதி எப்படி இருக்க வேண்டும். பாடசாலை நிதி எப்படி அமைக்கப்பட வேண்டும்.

(b) நிர்வாகிகளை நியமிப்பது எப்படி? அவர்களுடைய தகுதி, எத்தனை ஆண்டுகள்வரை அவர்கள் இக்குழுவில் இருக்கலாம்? அவர்களுக்கு இருக்கவேண்டிய, அதிகாரம், பொறுப்பு, முதலியவை என்ன ?

(c) அரசாங்கம், தனியார் பாடசாலையின் நிர்வாகக்குழுவை அங்கீகரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள், அப்பாடசாலையின் குழுவிலுள்ள அங்கத்தினர்களை நீக்கவும், அதற்குப் பதிலாக புது அங்கத்தினர்களை நியமிக்கவும், நிர்வாகஸ்தர்களை ஏற்படுத்தவும் அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்க சட்டதிட்டங்களை ஏற்படுத்தல், ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் தகராறு ஏற்படும் பக்ஷத்தில் அரசாங்கமே ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

(d) ஒருபாடசாலையை அங்கீகரிக்க சட்ட திட்டங்களை ஏற்படுத்த யோசனை கூறுதல்.

## கீழ்க்கண்டவைகளைப் பற்றி சிபார்சு செய்தல்

III. (a) நிர்வாகத்தினர்கள் ஆசிரியர்களை வைப்பதிலும் அவர்களுக்கு உயர்வு கொடுப்பதிலும், ஆசிரியர்கள் ஒழுங்காக வேலைசெய்யஎவ்வித அதிகாரம் நிர்வாகிகளுக்குக் கொடுப்பது என்பது.

(b) அவ்விதம் ஆசிரியர்களை நியமிப்பதிலும், உயர்வுகொடுப்பதிலும் நிர்வாகஸ்தர்கள் கையாளவேண்டிய முறைகள் என்ன ?

(c) தற்போது உள்ள அக்கிரிமெண்ட் முறையை நீக்கி அரசாங்க சிப்பந்திகளுக்கு ஏற்படுத்தியுள்ள சட்ட திட்டங்களை ஆரம்ப ஆசிரியர்களுக்கும், உயர்தரப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏற்படுத்தலாமா ?

IV. கீழ்க்கண்டவைகளைப் பற்றி சிபார்சு செய்தல்.

(a) சர்விஸ் ரூல்படி, நிர்வாகஸ்தர்களையும், ஆசிரியர்களையும் வற்புறுத்துவதற்காக அரசாங்கம் அதிகாரம் வைத்துக் கொள்ளலாமா?

(b) ஆசிரியர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் தகராறு ஏற்படும் போது அதைத் தீர்க்க கோர்ட்டு அல்லது கல்வி இலாகா மூலம் தீர்க்கலாமா ? எது நல்ல முறை?

V. அரசாங்கம், தனியார் துறை ஆசிரியர்களுக்கு மொத்தமாக ஒரே மாதிரி சம்பளம், லீவ், சர்வீஸ் இருக்கலாமா?

VI. ஆரம்பப் பள்ளிகளுக்கும் உயர்தர பாடசாலைகளுக்கும் ஒரே மாதிரியான சட்ட திட்டங்களை ஏற்படுத்தலாமா அல்லது ஆரம்பப் பாடசாலைக்கு வேறு, உயர்தர பாட சாலைக்கு வேருகப் பிரித்து சட்ட திட்டங்களை ஏற்படுத்த லாமா ?

VII தற்போது அரசாங்கத்திலுள்ள ஊழியர்களுக்கு ஏற்படுத் தப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை விதிகளை ஆசிரியர் களுக்கும் பொருந்தும்படி செய்யலாமா?

இந்தக்குழு தங்கள் சிபார்சுகளை மூன்று மாதத்திற்குள் அரசாங்கத் திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

# இதயங்களைக் கவர்ந்த இயற்கைக் கவிஞர்

[ எஸ். ஜேம்ஸ் ]

❊

நிர்மலமான நீலவானத்தில் கரு மேகக் குவியல்கள், நிறைசூலுடன் காட்சியளித்தன அவைகள் தாய்மைத் துன்பத்தைத் தாங்காது துன்பக் கண்ணீரைப் பெருமழையாகப் பொழிந்து கொண்டிருந்தன. சற்றைக்கெல்லாம் கரு மேகங்களிடையே சிறு இடைவெளி. அதனூடே பாய்ந்து வரும் சூரியனின் சுந்தர ஒளி வெள்ளம், மழை—ஒளி – இரண்டின் சங்கமத்திலே வானத்தில் ஓர் வானவில்—ஆம், வானவில்தான்! அந்தக் கண்கொள்ளாத காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார், அந்தக் கவிஞர். இதயத்தில் எண்ணங்கள் திரண்டு கவிதையாக உருவெடுத்தது :

"பொங்கிப் பூரிக்கிறது என் நெஞ்சம்
வானவில்லினைக் கண்டிடும் போது ;
வாழ்வின் துவக்கத்தில் அப்படியே இருந்தது :
வாழ்வின் நடுவிலும் அப்படியே இருந்தது ;
வாழ்வின் முதிர்ச்சியிலும் அப்படியே இருக்கட்டும்!
இல்லையெனில் நான் இறப்பேனாக !
குழந்தையே மனிதனின் தந்தை!
வரும் நாளில் இயற்கையின் இன்பப் பிணைப்பில் மென்மேலும் திளைப்பேனாக !"

—இவ்வாறு வாழ்வு முழுவதும் இயற்கையின் எழிலைப் பருகிப் பருகி, அவ்வின்பத்தை மற்றவர்களுக்கும் கவிதைத் துளிகளாக வழங்கியவர் இயற்கைக் கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ் வொர்த்.

கவிஞனுக்கு இயற்கையின் எழிலை இரசிக்கும் பெரும்பண்பு வேண்டும். இந்தப் பண்பு இல்லாதவர்கள் அமரகவிகளாக முடியாது. இயற்கை இரசனையை இயற்கையாகப் பெற்றவர் வேர்ட்ஸ்வொர்த். பாடப் புத்தகங்கள்—பட்டப்படிப்பு — பெரிய வேலை — இவைகளை விட கவிஞரைப் பெரிதும் கவர்ந்தவைகள் குன்றுகள். குன்றுகளிலிருந்து விழும் குளிர் அருவிகள் வெண்பட்டாடையொத்த மஞ்சுகள், நீலவானம், நிலவு, தாமரைத் தடாகம், கண்

ணைப்பறிக்கும் பூந்தோட்டம் முதலியவைகளே. வாழ்வின் முடிவுவரையில் இயற்கைத் தேவியின் தாசனாக வாழ்ந்து அவளுக்குப் பல கவிதை முத்தாரங்களை அணிவித்து அழகு படுத்திச் சென்றவர் வேர்ட்ஸ் வொர்த்.

1770-இல் இங்கிலாந்தின் வடமேற்கு மாகாணமாகிய கம்பர்லாந்தில் பிறந்தார் கவிஞர். ஆரம்பப் படிப்புகளுக்குப் பிறகு புகழ் பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். படிப்பு இனிக்கவில்லை: மாறாகக் கசந்தது. கேம்பிரிட்ஜில்பிரெஞ்சுப்புரட்சியில் ஈடுபாடு கொண்ட மாணவர் குழாம் அவரை வசீகரித்தது; அரசியலில் ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாக பிரான்சுக்கு இருமுறை சென்று வந்தார் வேர்ட்ஸ்வொர்த். புரட்சியாளருடன் சேர்ந்து அழிவை அணைப்பதிலிருந்து உறவினர்கள் தான் அவரைக் காத்தனர். உதவிப் பணத்தை நிறுத்தி, இல்லை என்றால் பலரைப் பழிவாங்கிய 'கில்லட்டின்' கவிஞர் உயிரையும் பறித்து கவிதையுலகிற்கு நிரந்தர நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கும்.

நிச்சயமற்ற நீண்ட இடைவெளிக்குப் பிறகு கவிதைக் கடலில் மூழ்கி முத்தெடுப்பதில் முனைந்தார் வேர்ட்ஸ் வொர்த். சாகும் போது நண்பர் ஒருவர் வழங்கிய 900 பவுன்கள் கவிதை புனையும் தொழிலில் காலூன்றும் தெம்பை கவிஞருக்கு அளித்தது. தன் வாழ்நாளில் எண்ணற்ற இரங்கற் பாக்களையும், சிறிய வர்ணனைக் கவிதைகள் பலவும் புனைந்துள்ளார் அவர். கவிஞர் பாடியவைகளுள் தி பிரிலூட், தி எக்ஸ்கர்ஷன்— ஆகிய இரண்டுமே மிகமிக நீண்டு ஆயிரக்கணக்கான வரிகளாலானவை.

இங்கிலாந்தின் இணையற்ற கவிஞர்களில் ஒருவர் என்ற பெரும் புகழுடன் எண்பதாம் ஆண்டில் (1850) இயற்கை எய்தினர், இயற்கைக் கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ் வொர்த்.

இயற்கை உள்ளளவும் கவிஞரின் புகழும் நிலைத்து நிற்கும்.

—"காஞ்சி"

# பெரிமேஸனைப் படைத்த 'பிரமன்'

— வி. ஆர். மதனகோபால் —

❋

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஹாலிவுட்டின் புகழ்பெற்ற, காலஞ்சென்ற வழக்கறிஞர் ஜெரி கீஸ்லர், கலிபோர்னியாவிலுள்ள பெரும் பண்ணை ஒன்றிற்கு ''டிரங்கால்'' போட்டார். ஒரு சிக்கல் மிகுந்த கடினமான வழக்கு ஒன்றினை ஜெரி கீஸ்லர் விவாதிக்க வேண்டி வந்தது. துப்பறியும் கதைகளில் வரும் புகழ்பெற்ற பெரிமேசன் என்னும் வழக்கறிஞர் எப்படியும் வழக்காடித் தீர்வு காண்பார் என்ற எண்ணமேற்பட்டது ஜெரிக்கு. உடனே அவர் பெரிமேசனைப்படைத்த எழுத்தாளர் எர்ல் ஸ்டான்லி கார்ட்னருக்கு அந்த டிரங்காலை போட்டார்.

பெரிமேசனை உண்டாக்கிய கதாசிரியர் ஸ்டான்லி கார்ட்னர் தன் டைப்ரைட்டருக்கு அருகில் உட்கார்ந்து வழக்கை மையமாக வைத்துக் கதை புனைய ஆரம்பித்தார். ஒரு மணி நேரத்துக்குள் கதை முடிந்தது. தன்முடிவை உடனே, ஜெரிக்குப்போன் பண்ணினார் கார்ட்னர்.

மர்மக்கதைகள் எழுதுவதில் மன்னனாகவும், துப்பறியும் நவீனங்கள் வரைந்து தள்ளுவதில் ஈடு இணையற்றும் விளங்கும் எர்ல் ஸ்டான்லி கார்ட்னரின் திறமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். வேகமாக நாவல்களை எழுதித் தள்ளுவதில் அவர் எட்கார் வாலசையும், ஜார்ஜ் சிம்னனையும் மிஞ்சிவிடுகிறார்.

மருத்துவம் படித்த மாம், குரோனின், கானன்டாயில், ஆண்டன் செகாவ் போன்றோர் எழுத்துத் துறையில் புகுந்ததுபோல் சட்டம் படித்து வழக்கறிஞராக ஆன கார்ட்னர் எழுத்துத் துறையில் புகுந்தார். எழுத்துத் துறையில் புகாமல் வெறும் வழக்கறிஞராகவே பணியாற்றி இருந்தால் எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் உலகப் புகழ்பெற்ற வழக்கறிஞராக ஆகியிருப்பார்!

ஏ. ஜே. குரோனின், மருத்துவத்துறையில் சில காலம் பணியாற்றிவிட்டு எழுத்துலகில் புகுந்ததுபோல் கார்ட்னரும் சில காலம் வழக்கறிஞராகப் பணியாற்றிவிட்டுத்தான் எழுத்துலகில் புகுந்தார். சுமார் இருபது ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றினார் கார்ட்னர். அப்படிப் பணியாற்றுகையில் அவருக்கு அவ்வப்போது எழுத வேண்டும் என்ற ஆவலும், சுற்றுப் பயணம் மேற்கொள்ளவேண்டும் என்ற விருப்பமும் ஏற்படுவதுண்டு. இறுதில் இவ்விரண்டும்

சேர்ந்து, கார்ட்னரை மேற்கொண்டு வழக்கறிஞர் தொழிலைச் செய்ய விடவில்லை.

மசாசூசெட்டில் உள்ள மால்டன் என்னுமிடத்திலே ஜூலை 17, 1889-ம் ஆண்டு பிறந்தார், எர்ல் ஸ்டான்லி கார்ட்னர். அவருடைய தந்தை ஒரு சுரங்க என்ஜினீயர். தன் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு ஆரோவைல் என்னுமிடத்திற்குச்சென்று குஸ்தி சண்டை பயில முனைந்தார். குத்துச்சண்டைகளை ஏற்பாடு செய்து நடத்துவது சட்டப்படி விரோதம் என்பதை எதிர்த்து கார்ட்னர் வாதாடிய விதத்தால் ஈர்க்கப்பட்ட அரசாங்க உதவி வக்கீல் கார்ட்னரைச் சட்டத்தில் பயிற்சி பெற யோசனை கூறினார். அதன்படி மாதம் இருபது டாலர் சம்பளத்தில் வக்கீலாகப் பயிற்சி பெற, சட்ட எழுத்தராக (கிளார்க்) பணியேற்றார்.

தனது இருபத்தியோராவது வயதில் கலிபோர்னியாவில் வக்கீலாகப் பணியாற்றி வழக்கறிஞர் பட்டம் பெற்றார். 1912-ம் ஆண்டிலிருந்து ஆக்ஸ்நார்ட், வென்டிரா என்னும் இடங்களிலிருந்து வக்கீலாகத் தொழில் புரிய ஆரம்பித்தார். முதன் முதலாக அவர் எழுதத் துவங்கியது 1921-ம் ஆண்டில், இரண்டு மூன்று கதைகள் எழுதிப் புத்தக வெளியீட்டாளர்களுக்குக் கொடுத்தார். மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் தீவிரமாக எழுத முனைந்தார், ஏறக்குறைய 1928-ம் ஆண்டில் தான் அவர் பெயர் பிரபலம் அடைந்தது. இருந்தும் அவர் முழு நேர எழுத்தாளராகப் பணி புரிய தன் வழக்கறிஞர் தொழிலை விட்டு விட்டது 1938-ம் ஆண்டில் தான்.

பயணம் செய்வது அவருக்கு மிகவும் பிடித்தம், கார்ட்னருக்கு உலகம் முழுவதும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற பேராவல் பிடித்து ஆட்டியது! குறிப்பாக மர்மம் நிறைந்த நாடான சைனாவிற்குச் செல்லவேண்டும் என்ற பெரு விருப்பம் இருந்தது அவருக்கு. அவர் பயணம் மேற்கொண்ட நாடுகள் சைனாவுக்கு அடுத்தபடியாக ஒஹேனலூலு, மெக்சிகோ, அலாஸ்கா, சவுத் சீஸ் மற்றும் தென் அமெரிக்க பகுதிகள்.

அப்படி அவர் பயணம் மேற்கொண்டாலும், தன் எழுத்துப் பணியை மட்டும் மறக்கமாட்டாராம். மூன்று நாட்களுக்கு ஒரு முறை ஒரு சிறு நாவலை எழுதித் தன் வெளியீட்டாருக்கு அனுப்பி விடுவாராம். ஓர் ஆண்டுக்கு ஏறக்குறைய மூன்று நாவல்கள் எழுதி விடுவார்.

அமெரிக்கா, கனடா ஆகிய இரண்டு நாடுகளில் மட்டும் அவர் நாவல்கள் சுமார் 100 மில்லியன் பிரதிகள் (பத்து கோடி) விற்றிருக்கின்றன. இதன் மூலம் அவருக்கு கிடைத்த தொகை 40 மில்லியன் டாலர்களுக்குமேல்.

அவர் உருவகப்படுத்திய ''பெரி மேசன்'' என்னும் துப்பறியும்

வக்கில் பற்றிய நாவல்கள் இது வரை நூற்றுக்குமேல் வெளிவந் திருக்கின்றன. ஏறக்குறைய ஒரு நாளைக்கு பெரிமேசன் நாவல்கள் மட்டும் 20,000 பிரதிகளுக்குமேல் விற்பனை ஆகின்றனவாம். இது மட்டுமல்லாமல் அவர் தகவல்களை அடிப்படையாக வைத்து வாரம் தவருமல் டெலிவிஷன் தொடர் களும் வெளிவருகின்றனவாம்.

தன் சொந்தப் பெயரில் மட்டு மல்லாமல் ஏ. ஏ. ஃபேர் என்ற பெயரிலும் துப்பறியும் நாவல்கள் எழுதி வருகிருர். அவர் சிருஷ்டித்த மற்ற புகழ்பெற்ற கதாபாத்திரங் கள் டெல்லா ஸ்டீரீட், டோனல்டு லேம், பெர்தாகூல் ஆகியோர்.

எழுதுவது என்ருல், மேலை நாட்டில் 'டைப்' அடிப்பது. நாம் பேனவில் எழுதுகிரும். மேலை நாட்டு எழுத்தாளர்கள் நேரிடை யாகவே டைப் அடிப்பார்கள். ஆனல் அதுகூட பழமையானது: வேகமில்லாதது என்பதற்காக 'டேப்ரெகார்டரில்' தன் கதை களைப் பதிவு செய்துவிடுவாராம். பின்னர் அதை டேப்பிலிருந்து எடுத்து, சுருக்கெழுத்தில் எழுதி டைப் அடிப்பார்களாம், அவரு டைய செயலாளர்கள். இதற் கென்றே அவருக்கு ஆறு செயலா ளர்கள் இருக்கிருர்கள்.

ஒருநாளைக்கு ஏறக்குறைய 20,000 வார்த்தைகளைப் பதிவு செய்துவிடுகிருர். இவை அவரு டைய கதைகள், கட்டுரைகள், கடிதங்களுக்காகத்தான்!

எர்ல் ஸ்டான்லி கார்ட்னருக்கு இப்போது வயது 79 ஆகிறது. அவர் கலிபோர்னியாவில் உள்ள எரன்சோ டெல்பய்சானேவில் இருக்கும் தன் பண்ணையில் வசிக் கிருர். நல்ல உடற்கட்டோடு பார்ப்பதற்கு ஒரு பெரிய போலீஸ் அதிகாரிபோல் காட்சியளிப்பார். நண்பர்களுடன் அமர்ந்து உரை யாடுவது அவர் விரும்பும் ஒன்று. ஆனல் அது தன் எழுத்துத் தொழி லுக்கு இடைஞ்சலாக இருப்பதை விரும்பமாட்டார்.

பணமில்லாத காரணத்தால் வழக்காடமுடியாதவர்கள்மீது அவ ருக்கு மிகுந்த அனுதாபம் உண்டு. பெரிமேசனைக்கூட அப்படிப்பட்ட குறை இயல்பு உடையவராகத் தான் படைத்தார். இப்படிப்பட்ட பரிதாபத்திற்குரியவர்களுக்கு உதவ வேண்டி அவர், "கடைசி நீதிமன்றம்" என்ற ஒன்றைத் துவக்கினர். இது. தவருகக்குற் றம் சாட்டப்பட்டு போதிய பண வசதி இல்லாததால் வழக்காட முடியாமல் தண்டனை பெற்றவர் களுக்கு உதவும் முகத்தான் 1948-ல் துவங்கப்பட்டது. ஏனே அது இப்போது இல்லை.

தான் எழுதுவதற்கென்றே ஸ்டான்லி கார்ட்னர் பலப்பல மறைமுகமான இடங்கள் வைத் திருக்கிருர். ஒவ்வொரு இடத் திலும் ஒரு சிறு நூலகம், டேப் ரிகார்டர் ஆகியவை இருக்கின்றன. வேண்டும்போது செயலாளர்கள் அங்கு வரவழைக்கப்படுவர். 'கேரவான்' எனப்படும் வேன்களி

னும் இத்தகைய வசதிகளைச் செய்து கொண்டுதான் கதைகளைப் பதிவு செய்வாராம்.

இப்படி வேகமாகக் கதைகள் எழுதி (சொல்லி) முடிப்பதினால் சிலர் கார்ட்னர் எழுதுவதில்லை அவருக்குப்பதில் வேறு 'கோஸ்ட்' எழுத்தாளர்கள் எழுதித்தள்ளு கிறார்கள். அவற்றில் கார்ட்னர் தன் பெயரைப் போட்டுக்கொள்கிறார் என்ற புரளியைக் கிளப்பிவிட்டனர். அதைக் கேள்விப்பட்ட கார்ட்னரின் வெளியீட்டாளர்கள், அது உண்மை என்று நிரூபிப்பவர் களுக்கு ஒரு லட்சம் டாலர் தருவதாக அறிவித்தனர். இதுவரை யாரும் நிரூபிக்கவில்லை.

பெரும் பணம் சம்பாதித்து விட்டார் எர்ல் ஸ்டான்லி கார்ட்னர். அவருக்கே கணக்கு தெரியாது இதுவரை எவ்வளவு பணம் சம்பாதித்தார் என்று. ஆனால் தான் சம்பாதித்ததில் பெரும் பகுதி அரசாங்கத்துக்குவரியாகச் சென்றுவிடுகிறது என்பதை மட்டும் அடிக்கடி சொல்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் அதிக புத்தகங்கள் செலவாகும் ஆசிரியர் என்று பார்த்தால் எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் தான் முன்னணியில் நிற்கிறார்.

எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் உண்மையில் ஓர் எழுத்தாளர் அல்ல, எழுத்தை விற்பனைசெய்யும் ஒரு வியாபாரி என்றே பலரும் சொல்கின்றனர். இருந்தும் அதைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை.

ஆனால் வேறு சில புகழ்பெற்ற துப்பறியும் எழுத்தாளர்களான டோரதி யுகீஸ், ஜார்ஜ் ஹார், மோன் கோக்ஸ் ஆகியோர் தங்களுடைய முன்னோடி கார்ட்னர்தான் என்கின்றனர்.

துப்பறியும் நாவல்களில் அதிகம் இனக் கவர்ச்சிசம்பந்தப்பட்டவைகளை எழுதுவதில்லை கார்ட்னர். அது அவருக்குப் பிடிப்பதில்லை. நல்ல கருப்பொருளும், கற்பனை வளமும் இல்லாதவர்கள்தான் அப்படிக் கீழ்த்தரமாக உணர்ச்சி ஊட்டக் கூடிய வகையில் எழுதுவார்கள் என்கிறார் கார்ட்னர்.

கார்ட்னர் வழக்கறிஞராகப் பணியாற்றியபோது அவர் நீதிமன்றங்களில் வழக்காடுவதே ஒரு தனி விதமாக இருக்கும். மிக அற்பம் என்று எண்ணக் கூடிய பாயிண்டை எடுத்து விவாதிப்பார். வெற்றி பெறுவார். ஒரு முறை சூதாடினார்கள் என்பதற்காக சில சீனர்கள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் சீனர்களுக்காக ஆஜரான கார்ட்னர் வேறு ஒரு டஜன் சீனர்களை அழைத்து வந்து குற்றம் சாட்டப்பெற்ற சீனர்களோடு நிறுத்தி வைத்துச் சூதாடியவர்கள் இவர்களாக ஏன் இருக்கக் கூடாது என்று விவாதித்தார். சீனர்களுக்கு முக வேறுபாடு அதிகமில்லாததால் யார் யார் என்று தீர்மானிக்க முடியாமல் குழப்ப மேற்பட்டு வழக்கே தள்ளுபடியாயிற்று!

இன்னொரு வழக்கில் ஒரு

மனோதத்துவ நிபுணர் சாட்சி சொல்ல வந்து, கார்ட்னர் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறி தான் சாட்சி சொல்ல விரும்பவில்லை என்று விலகிக் கொண்டார்.

வேறொரு அவதூறு வழக்கில் ஒரு பெண் மணி இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் டாலர் கோரியிருந்தாள். அந்த அவதூறினால் நரம்புத் தளர்ச்சியுற்று மனம் பலவீனம் பட்டுவிட்டதாக இந்த வழக்கு நடைபெற்று வரும்போது அந்த நீதி மன்றத்தில் அப்பெண் மணியும் இருக்கும் போது பூகம்பம் ஏற்பட்டது. அதையே வைத்துக் கொண்டு கார்ட்னர், ''இந்த பூகம்பம் ஏற்பட்டபோது எல்லாரும் அதிர்ச்சியடைந்தார்கள். ஆனால் இப்பெண்மணி அமைதியாக வீற்றிருந்தாள். இதிலிருந்தே நரம்புத் தளர்ச்சியடைவதோ, மனம் பலவீனம் அடைவதோ சாத்தியமில்லை இப்பெண்மணிக்கு என்று தெரிகிறது'' என்று வாதாடி வழக்கைத் தள்ளுபடி செய்ய வைத்தார்.

ஆரம்பத்தில் கார்ட்னர் ''பிளாக் மாங்க்'' எனப்படும் பத்திரிகைக்குத் தான் கதைகள் எழுதி வந்தார். பின்னர்தான் நாவல்கள் எழுதி வெளியிட முனைந்தார். இந்த முயற்சிதான் அவரை அதிகம் படிக்கும் நாவலாசிரியராக ஆக்கியது. இன்றைய துப்பறியும் எழுத்தாளர்கள் வரிசையில் முதன்மையிடம் வகிக்கிறார் எர்ல் ஸ்டான்லி கார்ட்னர்.

அவர் சிருஷ்டித்த பெரிமேசன் அவருடைய பிரதிபலிப்புதானா? அதற்கு அவர் சொல்லும் பதில்: ''அவதியுறுவோர்களுக்கு உதவும் பாத்திரமாக படைக்கப் பட்டது தான் பெரிமேசன். என் வக்கீல் நண்பர்கள் நான்கைந்து பேர்களின் குணாதிசயங்களைக் கலந்து உருவாக்கப்பட்ட பாத்திரம் தான் அது. ஒரு வேளை என்னுடைய குணாதிசயங்கள் சிலவும் சேர்ந்திருக்கலாம்,'' என்பதுதான்.

எழுத்து மூலம் கோடீஸ்வரனாக ஆகலாம் என்பதை நிரூபித்த ஒரு சிலரில், எர்ல் ஸ்டான்லி கார்ட்னரும் ஒருவர். இந்த வயதில் கூட அவர் எழுதிக் கொண்டிருக்கிறார். உயிர் உள்ளவரை அவர் எழுதிக் கொண்டேயிருப்பார்!

—''முத்தாரம்''

# 3 மந்திரிகள்

## நெடுஞ்செழியன், நடராசன், வேழவேந்தன்

## — நியமனம் —

※

## இலாகாக்கள் மாறுதல் விவரம்

## நெடுஞ்செழியன் கல்வி அமைச்சர் ஆகிறார்

*தமிழ்நாடு மந்திரிசபை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. திரு. நெடுஞ்செழியன், திரு. என். வி. நடராசன், திரு. வேழவேந்தன் ஆகியோர் மந்திரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

※

திரு. நெடுஞ்செழியன் கல்விசுகாதாரம் இலாகாக்களை வகிப்பார். தி. மு. க. அமைப்புச் செயலாளராக இருந்த என். வி. நடராசன் மேல் சபை மெம்பர். இவருக்கு பின் தங்கியவகுப்பினர் இலாகா வழங்கப்பட்டது.

திரு. வேழவேந்தன் தொழிலாளர்நல மந்திரியாகநியமிக்கப் பட்டுள்ளார்.

முதன் மந்திரி கருணாநிதி திங்கட்கிழமை இரவு 8-25க்கு கவர்னரை சந்தித்து புது மந்திரிகள் பட்டியலைக் கொடுத்தார். கவர்னர் உஜ்ஜல் சிங் இப்பட்டியலை அங்கீகரித்தார்.

தற்போதுள்ள மந்திரிகள் அனைவரும் பதவியில் நீடிப்பார்கள்.

மந்திரி சபையில் மந்திரிகள் எண்ணிக்கை 10 ஆக இருந்தது 13 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மந்திரிகளுக்குப்பின் கண்டவாறு இலாகாக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

முதன் மந்திரி கருணாநிதி பொது நிர்வாகம், ஐ. ஸி. எஸ்., ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், ஜில்லா ரெவின்யூ அதிகாரிகள், டெபுடி கலெக்டர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட விவகாரங்கள், போலீஸ் தேர்தல்கள், மது விலக்கு, தகவல், பிரசாரம், உணவு உற்பத்தி, பாஸ் போர்ட், நியூஸ் பிரிண்ட் கண்ட்ரோல் பண்டங்கள் விலைகள் சப்ளைகள் சட்டம்.

கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் கல்வி (தொழில் கல்வி உட்பட) ஆட்சி மொழி, பொது சுகாதாரம், வைத்தியம், சட்ட சபை·

நிதி மந்திரி மதியழகன்: நிதி, திட்டம், ரெவின்யூ, ரெவின்யூ போர்டு, ஜில்லா ரெவின்யூ அமைப்புகள். அகதிகள்.

விவசாய ஹரிஜன நல மந்திரி, திருமதி சத்தியவாணி முத்து விவசாயம், ஹரிஜனநலன், மாதர்கள் குழந்தைகள் நலன், மீன் வளம், உல்லாசப் பயணம்.

பின் தங்கிய வகுப்பினர் நல மந்திரி என். வி. நடராசன்: பின் தங்கிய வகுப்புகள். ரிஜிஸ்திரேஷன், அரசாங்க அச்சகம்.

உணவு மந்திரி: ப. உ. ஷண்முகம்: உணவு விற்பனை வரிகள், கால் நடை பராமரிப்பு, பால் சப்ளை.

தொழில் மந்திரி எஸ். மாதவன்: தொழில்கள், ஜவுளிகள், நூல், கைத்தறி, சுரங்கம், கனிப்பொருள்கள், இரும்பு உருக்கு கட்டுப்பாடு, வேலை வாய்ப்பு, பயிற்சி கம்பெனிகள், சட்டம் கோர்ட்டுகள், சிறைகள்.

பொதுப் பணித்துறை மந்திரி சாதிக் பாட்சா; பொதுப் பணித்துறை, சிறு பாசனங்கள், (சிறு பாசன திட்டவேலைகள் உட்பட) நெடுஞ்சாலைகள்.

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. முத்துசாமி: முனிசிபல் நிர்வாகம், சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்துக்கள், பூதானம், கிராம தானம், கதர், கிராம தொழில்கள்.

கூட்டுறவு மந்திரி சி. பா. ஆதித்தனுர்; கூட்டுறவு போக்கு வரத்து, சர்க்கார் உடமையாக்கப்பட்டுள்ள போக்குவரத்து, மோட்டார் வாகன் வரிகள், துறைமுகங்கள்.

அறநிலையப் பாதுகாப்பு மந்திரி சுப்பையா: அறநிலையப் பாதுகாப்பு ஜாகை வசதி, வீட்டு வசதி கட்டுப்பாடு, சீர்திருத்தப் பணிகள்.

மின்சார மந்திரி திரு. ஓ. பி. ராமன் : மின்சாரம், கடன் அளித்தல் (கிராமங்கள்) சமபந்தமான சட்டம், சீட்டுகள் பற்றிய சட்டம் வனங்கள்.

தொழிலாளர் நல மந்திரி வேழவேந்தன் : தொழிலாளர் நலன், எடைகள், அளவைகள், சட்டம் புள்ளி விவரங்கள், அறைகள்.

# ஊரை உருவாக்குவோம்

மூலக்கதை : — தமிழாக்கம் :
தாகூர் — த. நா. சேனாபதி

தேனீக்கள் கூடுகட்டும் போது எதைக் கருதிக் கட்டுகின்றன? அவற்றிற்கு உண்டு களிக்கத் தேன் தேவை இருக்கிறது. சில பருவங்களில் தேனீக்களுக்கு நிரம்பத் தேன் கிடைக்கும். சில பருவங்களில் கிடைக்காது. ஆகவே, அவை முன் எச்சரிக்கையாக ஒன்று சேர்ந்து, தேனைத் திரட்டிக் கூட்டில் கொண்டு வந்து சேர்க்கின்றன. அந்தத் தேனை நம்பி அவை அங்கே வாழ்ந்து வருகின்றன. அது ஒரு சிற்றூரைப் போல் விளங்குகிறது. சிற்றூர் என்றால் பல மக்கள் கூடிவிட்டால் போதுமா? ஒருவரோடு ஒருவர் பழகிப் பொது நன்மையைக் கருதி ஒத்துப்போனால்தான் அது ஊராகும்.

முதலில் ஒரு பொருளைத் தாமே நுகரவேண்டும் என்று தொடங்கிய முயற்சி, போகப் போகத் தாமும் தியாகம் செய்யவேண்டும் என்ற பரந்த நோக்கத்துக்கு இடம் அளித்தது. தன்னலனுக்காக ஒன்றைச் செய்வதைவிடப் பொது நலனைக் கருதி அதைச் செய்யவேண்டும்; இது தான் உயர்ந்த நோக்கம். நம்மைச் சுற்றியிருப்பவர்களெல்லோரும் வாழ்ந்தாலன்றி நாம் பிறவி எடுத்து ஒரு பயனும் இல்லை என்ற எண்ணம் மனித உள்ளத்தில் தோன்றியது. இதிலிருந்து இம்மை என்பது முக்கியமன்று; மறுமையே உண்மை என்ற உணர்வும் ஏற்பட்டது. ஆகவே, வாழ்நாளெல்லாம் தானே உண்டு களிப்பதைவிட்டு மனிதன் மனமாரப் பொருளை வழங்கலானான். எனவே, ஊர் என்றால் மக்கள் ஒருவரோடொருவர் பழகி இம்மையையும் மறுமையையும் ஒன்றெனக் கருதித் தன்னலமற்று ஓர் இடத்தில் வாழ்வதைத்தான் குறிக்கும். மக்களின் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது; பண்டைக் காலத்தில் மனிதன் காட்டு விலங்குகளை வேட்டையாடிப் பிழைத்துவந்தான். அதனால் ஊர் என்பது உருவாகவில்லை. உணவு கிடைக்கும் என்ற உறுதி இல்லாததால் அப்போது ஒவ்வொருவரும் தனித்தனியே உணவைநாடி அலைய வேண்டியிருந்தது. அன்றைய நிலையில் மக்கள் கொடுமைமிக்கவர்களாகவும் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டவர்களாகவும் இருந்து வந்தார்கள். சமூக ஒழுங்குக்குக் கட்டுப்படாத வாழ்க்கை அது. இந்த நிலையில் ஊர் எப்படி உருவாகும்?

பெரிய பெரிய ஆற்றங்கரையோரந்தான் மனிதனுக்கு வேண்டிய உணவுப் பொருள் நிலையாகவும், தங்கு தடையின்றியும், மிகுதியாகவும் கிடைத்தது. இப்படித்தான் நைல், யாங்ஸியாங், ஆக்ஸஸ், யூஃப்ரடீஸ், கங்கை, காவிரி, தாமிரவருணி, யமுனை முதலிய ஆற்றங்கரையோரங்களில் சிறந்த நாகரிகங்கள் தோன்றின: மக்கள் ஒன்றுகூடி வாழத் தலைப்பட்டார்கள்; ஊர்கள் இவ்விதமே உருவா

வின, ஒரே இடத்தில் ஆற்று வண்டல் படிந்த மண்ணிலே, ஆண்டு மனிதன் உழுது பயிரிடத் தொடங்கியதும் ஏராளமான விளைவு கிடைத்தது. உடனே பல மக்கள் அதே இடத்தில் நிலையாகத் தங்கிவிட்டார்கள். இப்படி ஊர் என்று ஏற்பட்டதும் மக்கள் ஒருவரை ஒருவர் வழிப்பறி செய்து பிழைப்பதைவிட ஒத்துவாழ்ந்தால் அனேகரும் பயன் காணமுடியும் என்பதைக் கண்டு கொண்டார்கள். உணவுத் தானியம் மிகுதியாகப் பயிரிட்டுக் குவிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஒன்றுகூடிப் பழகுவதுதான் மனிதனுக்கு இயல்பானது என்ற உண்மை புலனாயிற்று. நிலமடந்தையின் அழைப்பை ஏற்று, ஒரே இடத்தில் பலரும் கூடி, இலை போட்டு உண்டு களிக்கலானார்கள். அப்போது ஒருவரையொருவர் உடன் பிறந்தவராகக் கருதும் மனப் பாங்கு ஏற்பட்டது. பல உயிர்கள், ஒரே உணவின் வாயிலாக இறைவன் ஒருவனே என்ற தத்துவத்தை எல்லாம் ஓர் உயிர் என்ற உண்மையை உணர்ந்தனர் என்றால், அதுசிறப்பில்லையா? அப்போது ஒருவரோடொருவர் பழகுவது நல்லது மட்டுமன்று, அதில் மகிழ்ச்சியும் உண்டு என்று கண்டு கொண்டார்கள். இதனால் ஒருவருக்காக மற்றவர் பொருளைச் செலவிடவும் ஏன், உயிரையே கூடக் கொடுக்கவும் முடிந்தது.

நிலமடந்தை நமக்கு அளிக்கும் உணவு அல்லது தானியம் வயிற்றை நிரப்புவதற்காகமட்டும் ஏற்பட்டதன்று; அதை நாம் கண்குளிரப் பார்த்து நிறைவுபெற முடிகிறது; நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. பயிர் செழித்துத் தொங்கும் அந்தக் காட்சி இந்த அடிவானத்தினின்று அந்த அடிவானம் வரையில் கதிரவனின் கிரணங்கள் பொன்னொளி பரப்புவது போல் கண்ணுக்கு எட்டுகிறமட்டும் அறுவடைக்குத் தயாராகப் பொன் வண்ணத் தானியக் கதிர்கள் கண்ணைக் கவர்கின்றன. இந்த இரண்டும் சேர்ந்து பொன்னுன இன்னிசை எழுப்பி நம் உள்ளத்தைக் கவர்ந்து நமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன. இந்தக் காட்சியைக் காணும் போது மனிதன் சும்மா சாப்பாட்டைப்பற்றியா எண்ணிக் கொண்டிருக்கிறான்? விழாக் கொண்டாட ஏற்பாடு செய்கிறான்; அங்கே திருமகளைத் தானியலட்சுமியின் வடிவில் காண்கிறான். அவள் ஒரே சமயத்தில் கண்ணுக்கு இனியவளாகவும் இருக்கிறாள்; எல்லோருக்கும் நன்மையும் அளிக்கிறாள். நிலமடந்தை அளித்த இந்த உணவுக் களஞ்சியம் பட்டினியைப் போக்கமட்டுமா பயன்படுகிறது? அதனிடம் உள்ள அழகென்னும் அமுதத்தையும் கண்ணால் உண்டு களிக்கிறோம். மரத்தில் பழம் பழுத்துத் தொங்கும் காட்சி, நம்மை அது அழைப்பது போல் இருக்கிறது. உள்ளே அடங்கியிருக்கும் ஊட்டம் தரும் சுவையான பகுதியை உண்ணமட்டுமா அது நம்மை அழைக்கிறது? தன் உருவம், சுவை, நிறம், மணம் எல்லாவற்றையும் நுகரத்தான் அப்படி அழைக்கிறது! அடித்துக் கொன்று வழிபறிப்பதிலுள்ள கொடுமை அதில் இல்லை; 'எல்லோரும் என்

லைப் பறித்து உண்ணுங்கள்' என்பது போலத்தான் அது நம்மை அழைக்கிறது. நிலமடந்தை நமக்கு அளிக்கும் உணவுத் தானியக் கதிர் கண்ணுக்கு அழகாக இருப்பது போல், மக்கள் ஒன்று கூடி வாழ்வதும் அழகிய காட்சிதான். ஒருவன் தன்னந்தனியாக உண்ணுகிறான் என்றால், அவன் தன் வயிற்றை நிரப்பிக்கொள்கிறான் என்று பொருள்; நாலைந்துபேர் சேர்த்து உண்ணும்போதோ கூட்டுறவு ஏற்படுகிறது. இப்படி ஒருவரோடொருவர் கலந்துபழகும் போது சோறு சமைக்கும் பாண்டமும் அழகாகத் தோற்றம் அளிக்கிறது; இலை போட்டுப் பரிமாறும் விதமும் மனத்துக்குப் பிடித்திருக்கிறது. எல்லாம் ஒழுங்காகவும் தூய்மையாகவும் அமைந்திருக்கின்றன என்ற நிறைவும் ஏற்படுகிறது.

வறுமை இருக்கும் இடத்தில் அள்ள வழங்க யாருக்கு மனம் வரும்? ஆனால் வழங்குவதுதான் மனித சமூகத்துக்குச் சிறப்பு. ஆகவே, நிலமடந்தையின் உணவுக் களஞ்சியத்துக்கு அருகிலேயே மக்கள் கூடி வீடு வாயில் அமைத்துக் கொண்டு வசிக்கலானார்கள். இப்படி அனைவரும் கலந்து பழகியதால், அவர்களிடையே என்றென்றும் நிலைபெறக்கூடிய அறவொழுக்கம், இலக்கியம், இசை, சிற்பக்கலை இவற்றைக் குறித்து நீடித்த முயற்சி எல்லாம் தொடங்கின. கூட்டுறவினால் மனித சிந்தனை வளர்ந்தது; ஆழ்ந்த சிந்தனையின் மூலம் அவன் தன்னை உணர்ந்தான். தன் முழு உருவமும்—மனிதப் பண்புதான்—இன்னதென அவனுக்குத் தெரிந்தது.

கிராமங்கள் தோன்றிய பின் நகரங்கள் தோன்றலாயின. இந்த நகரங்களில் அரசாங்க அதிகாரம் தலை தூக்கியது. அங்கே படையரண்கள், வாணிகர்களின் பண்டகசாலைகள், அதைக் கற்கவும் கற்பிக்கவும் பல இடங்களிலிருந்து வந்து ஒரே இடத்தில் ஆசானும் மாணாக்கனும் தங்கியிருக்க வசதி, தொலைவிலுள்ள நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு, வெளிநாட்டு மக்களுடன் வாணிகம்—இப்படி யாவும் ஏற்பட்டன. புல்கூட முளைக்காத கட்டாந் தரையில்—கற்பாறைகள் பரந்து கிடக்கும் இடத்தில்—மக்கள் காலந்தள்ளுவது எளிதன்று. அங்கே வலியவனும் எளியவனும் போரிட்டால் அவர்களுள் எவன் மிக்க வலிமையுள்ளவனோ அவன் கைதான் ஓங்கும். அவனுக்கு அடங்கித்தான் மற்றவர்கள் வாழ வேண்டியிருக்கும். மனிதனின் தனி சுதந்திரத்தை அதிகமாக அடக்கி விட்டால், தனி மனிதனுடைய ஆற்றலுக்கும் வழி இல்லாமல் போய்விடும். ஊக்கம் இருந்தாலன்றோ ஆற்றல் ஏற்படும்? தனி மனிதனுடைய சுதந்திர ஆர்வம் பொங்கி எழும்போது பெருந்தமாறுதல் நேருகிறது. பொது மக்களை அது தட்டி எழுப்பி ஊக்கி விடுகிறது. ஒருவரைப் பார்த்து ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு முன்னுக்குவர முயல்கிறார்கள். அறிவுத் துறை, செயல் துறை, இரண்டிலும் புதிய புதிய சிந்தனைக்கு வழி ஏற்படுகிறது. இப்

படிப் பல நாட்டு மக்களின் சிந்தனையும் இணைவதால் கல்வி வசதி பெருகுகிறது.

ஆயினும், நகர வாழ்க்கையை நரக வாழ்வாக்கும் முயற்சிகள் தோன்றுகின்றன. புகைக் கொடியைப் பறக்கவிடும் ஆலையின் சங்கொலி கேட்கிறது; பணத்தாசை காட்டி மக்களை அமைதியான கிராமச் சூழ்நிலையிலிருந்து மயக்கி அழைக்கிறது, இயந்திர பூதம். இதனால் இன்று மனிதன் மீண்டும் பண்டை நிலைக்கு இழிந்து விட்டான். பண்டையில் காட்டு மிராண்டியாக வாழ்ந்தபோது தன்னலத்தையே முக்கியமாகக் கருதி வந்தான். அந்தத் தன்னலமே இன்று பேராசை என்னும் பெரும் பூதமாகக் காட்சியளிக்கிறது. தனக்குச் சொந்தமாக இன்ப மாளிகை கட்டிக் கொண்டு, மனிதன் பிறர் உடலை உறிஞ்சித்தான் கொழுக்கிறான். பழங் காலத்து வழிப்பறிக் கொள்ளைத் தொழில் புதிய உரு எடுக்கிறது. கிராமங்களில் மட்டும் என்ன? முன்னே தாம் சேர்த்த பொருளைத் துய்த்து இன்பமாகப் பொழுது போக்குவதற்காகக் கிராமங்களில் மக்கள் கூடுவார்கள்.

நாமே உண்டுகளித்து வாழ வேண்டும் என்ற எண்ணம் மேலிடும் போது நாம் பிறருக்கு அடிமைப்படாவிட்டாலும் நம் அகந்தைக்கு அடிமைகள் ஆகிறோம். முன்பு பணக்காரன், தான் ஈட்டிய பொருள் பிறருக்கும் பயன்பட வேண்டும் என்று எண்ணிவந்தான். "செல்வம் என்பது எல்லாருக்கும் பொதுவானது; நாம் அந்தப் பொதுச் சொத்துக்குத் தருமகர்த்தன்" என்ற முறையில் நடந்து கொண்டான். ஒரு மான அவமானம் நேர்ந்தபோது தன்னை அண்டினவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுவான். இன்று போல் கதவை அடைப்பதில்லை! அன்று அனைவருக்கும் பொதுவாக இருந்த உணவுப் பொருளை இன்று பேராசை காரணமாகப் பணக்காரன் தன்னிடமே குவித்துவைத்துக்கொண்டு கொள்ளை இலாபம் அடிக்கப் பார்க்கிறான். முன்பு மக்கள் சமுதாயத்தை ஒன்று சேர்த்த அதே உணவுப் பொருள் இன்று அதை இரு கூறுகப் பிளக்கப் பயன்படுகிறது!

இன்று நாம் செய்ய வேண்டியது, மக்களை இணைத்து அவர்களிடையே கூட்டுறவை வளர்ப்பதுதான். உள்ளார்ந்த அன்புடன் தனிப்பட்ட முயற்சியினாலும், பொது முயற்சியினாலும் நகரத்தையும் கிராமத்தையும் இணைத்து நிறைவுக்கு வழிகோல வேண்டும். விஞ்ஞான அறிவை, இயந்திர நுட்ப முறையை ஆக்க வழியில் பயன்படுத்தி இத்தகைய பொது நலனைக் கண்ணாரக் கண்டு மகிழ வேண்டும் என்பதே என் அவா.

—"கிராம நலம்"

# குறள்வழி காந்தி

திரு. நெ. து. சுந்தரவடிவேலு,
(தலைமைக் கல்வி ஆலோசகர், தமிழ் நாடு அரசு.)

இந்நில உலகில் பிறந்தோர் எண்ணில் அடங்கார். இறந்தோரும் அவ்வாறே.

வெகு சிலரைத் தவிர, ஏனையோருக்கு 'இருந்தார்; இறந்தார்' என்னும் நிலையே. காரணம் என்ன?

'தன் பெண்டு, தன் பிள்ளை, தன்வீடு, தன் சம்பாத்யம்; இவையுண்டு தானுண்டு என்னும் சின்னதொரு கடுகு உள்ளம் உடையோர் அவர்கள். அவர்களை, 'தன் பெண்டு தன் பிள்ளை' மட்டுமே நினைப்பர். அதுவும் எப்போதோ ஒரு முறை; அதிலும், சில ஆண்டுகளுக்கு மட்டுமே.

புகழ்படவாழாதாரே, மண்டிமடியும் இஞ்ஞாலத்தில் ஆயிரங் காலத்துப் பயிர்களாக, நல்லோர் சிலர் என்றோ ஒரு முறைதோன்றுகிறார்கள்; வழிகாட்டுகிறார்கள்; தொண்டு செய்கிறார்கள்; துன்பம் துடைக்கிறார்கள்; கண்ணீர் துடைக்கிறார்கள்; நிலவரை நீள் புகழ் ஆற்றி ஒளிர்கிறார்கள்.

கோடி கோடியில் ஒருவராகத் தோன்றும் அப்பெரியார் வரிசையில் சேர்ந்தவர்களே, சாக்ரடீசு, ஏசு, நபி, புத்தர், மகா வீரர், காந்தி ஆகியோர்.

'தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரததேசந் தன்னை வாழ்விக்க வந்தவர்' நம் காந்தியடிகள். அரசியலுக்கும் அறநெறிக்கும் நெடுந் தொலைவு என்றிருந்த நிலையை மாற்றி, அரசியலை அறநெறியால் தூய்மைப் படுத்தியவர் அவர். எனவே, இந்நாட்டு மக்களின் இதயத்தை மட்டுமின்றி, உலக மக்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டவர் அவர்.

## தம்மையே ஈந்த தகைமையாளர்

காந்தியடிகளார் தம்மையே ஈந்தவர். முழுக்க முழுக்க ஈந்தவர். யாருக்கு ஈந்தவர்? தம் குடும்பத்திற்கா? இல்லை. தம் சாதிக்கா? இல்லை. தம் சமயத்திற்கா? இல்லை பின் யாருக்கு ஈந்தார்? இந்திய மக்கள் அனைவருக்கும் தம்மையே ஈந்தார். அது மட்டுமா? பிற நாட்டு மக்களுக்கும் தம்மை ஈந்தார், அடிமை விலங்கறுக்க முயன்ற பிற நாட்டு மக்களுக்கும், தமக்கே உரிய புதுவழியைக் காட்டியதன் மூலம் ஈந்தார்.

வெறும் வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கிய காந்தியடிகளார், உறங்கிக் கிடந்த நம் இந்திய மக்களைத் தட்டி எழுப்பி,

நாட்டுப் பற்றினை ஊட்டி, விடுதலை உணர்ச்சியை எழுப்பி, அவர்களைப் பல்லாண்டு அகிம்சை வழியிலே செலுத்தி இந்தியாவிற்கு அரசியல் விடுதலையைப் பெற்றுத் தந்தார்! எனவே அவர், 'செயற்கரிய செய்த பெரியார்; ஆவார்.

" பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் "

என்னும் பொய்யாமொழிக்கு இக் காலச் சான்றாக விளங்குகிறார் காந்தியடிகள்.

அடிமையிலும் மிடிமையிலும் ஆழ்ந்து 'ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்றுமில்லா' மாக்களாக வாழ்ந்து வந்த நம்மை விழிப்புறச் செய்தவர் காந்தியடிகளார். விடுதலை வேட்கை ஊட்டியவர் காந்தியடிகளார். இவைசெயற்கரிய செயல்களே. இவற்றிலும் சிறந்தது ஒன்றுண்டு. தேசத்தொண்டர்களை, தியாகிகளை, பல நூறாயிரவரை உண்மை நெறியில், அகிம்சை வழியில், நடத்திச் சென்று வெற்றி கண்டதே அது.

மெலிந்த உருவினராம் காந்தியடிகளார் இத்தகைய பேராற்றல் பெற்றதெப்படி? தம் சொந்த அவாக்களை யெல்லாம் அகற்றி விட்டு இந்தியாவிற்கும் இந்திய மக்களுக்கும் தம்மை முழுமையாக ஈந்ததே, அவரது ஆற்றலின் இரகசியம். அவர்களை முற்றிலும் நீக்கி விட்டவரிடம் அழிவற்ற நற்செயல்கள் விரும்புகிறபடியெல்லாம் வந்து சேரும்

அவாவினை ஆற்ற அறுப்பின்
தவாவினை, தான்வேண்டு
மாற்றான் வரும்

என்னும் பொதுமறையை மெய்ப்பிக்கிறார் காந்தியடிகள்.

## அண்ணலின் தனிச் சிறப்பு

காந்தியடிகளாரைப் போன்று தத்தம் நாட்டின் அரசியல் விடுதலையைப்பெற்றுத் தந்த தலைவர்கள் ஒரு சிலர் உண்டு. அவர்கள் மேற்கொள்ளாத தனிமுறையைக் காந்தியடிகளிடம் காண்கிறோம், அது என்ன ?

விடுதலைப் போராட்டத்தை அகிம்சை வழியில் நடத்தியதே அச்சிறப்பு,

" நல்லாறு எனப்படுவது
யாதெனின் யாதொன்றும்,
கொல்லாமை சூழும் நெறி"

என்னும் குறள்வழியை அரசியலிலும், விடுதலைப்போரிலும் பின்பற்றியது போற்றற் குரியதாம்.

முன்பின் கண்டறியாத பேரியக்கத்தை, முப்பதுகோடி மக்களின் விடுதலைப் போரை, பழகாத பாதையிலே செலுத்தியும், வெற்றி பெறச் செய்த காந்தியடிகளார்,

" எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

என்னும் குறளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.

அவரது நீண்ட உரிமைப் போராட்டத்தின்போது அந்நிய அரசினர் கட்டவிழ்த்துவிட்ட அடக்கு

முறைகள் பலப்பல; விளைவித்த கொடுமைகளும் கொஞ்சமல்ல. சிறைக்காவலும் பல முறை. ஆயினும் தேசத்தந்தை கலங்கினர் இல்லை; மயங்கினர் இல்லை; தயங்கினர் இல்லை. தலைவர் எவ்வழி, தொண்டர் அவ்வழி. எனவே தேசத் தொண்டர்களும் துணிந்து நின்றனர். தொடர்ந்து தொண்டாற்றினர்.

அந்த அஞ்சாநெஞ்சினர் முன்னே, அலை அலையாக எழுந்த இடர்களெல்லாம் உடைந்து ஓடின.

> 'அடுக்கி வரினும் அழிவிலான்
> உற்ற இடுக்கண் இடுக்கட்
> படும்'

என்னும் வள்ளுவர் வாக்கு எவ்வளவு உண்மை!

இந்தச் சாதனை வீரரும் சோதனைக்கு உள்ளாகாமல் இல்லை. இளமைப் பருவம் சோதனைப் பருவம். உறுதிபெறுப்பருவம். அப்பருவத்தே, தகாத நண்பர்கள் இரண்டொருவர் சேர்ந்தனர் காந்தியோடு,

> ''நிலத்தியல்பால் நீர் திரிந்தற்
> றாகும் மாந்தர்க்கு
> இனத்தியல்ப தாகும்
> அறிவு''

அவரது நண்பர்கள் புலால் உண்பதிலும், புகை பிடிப்பதிலும் பெரிதும் பற்றுடையவர்கள். சைவ உணவினராகவே அதுவரை வளர்ந்து வந்த காந்தியை மெல்லப் புலால் உண்ணச்செய்துவிட்டனர். பெற்றோர் அறியாது செய்த இச் செயல் அவர் நெஞ்சை உறுத்திற்று.

புகை பிடிப்பதற்குப் பணம் தேவைப் பட்டது. அதற்காகத் தன் தமையனின் தங்கக் காப்பிலிருந்து சிறிது பொன்னை யாரும் அறியாது வெட்டியெடுத்துக் கொண்டு போனார் காந்தி.

> "தன்னெஞ் சறிவது பொய்
> யற்க; பொய்த்தபின் தன்
> னெஞ்சே தன்னைச் சுடும்"

காந்தியின் நெஞ்சம் சுட்டது. அவ்வேதனை தாங்கமுடியவில்லை.

> "தினைத்துணையாங் குற்றம்
> வரினும் பனைத்துணையாக்
> கொள்வர் பழிநாணுவார்"

நற்குடியில் பிறந்த காந்தியின் இயல்பும் பழி நாணுதல். எனவே அக்குற்றங்களை மறைத்து வைக்க, அவரது மனம் இடம் தரவில்லை. நேரில் சொல்லவும் வெட்கம். எனவே, சீட்டில் எழுதித் தெரிவித்து விட்டு மன்னிப்புக் கோரினர் தந்தையிடம். தந்தையோ, கடிந்து கொள்ளாது, கண்ணீரால் கழுவினர் அக்கறையை. அது காந்தியின் மனத்தைத் திருத்திற்று; என்றும் மாறுதபடி திருத்திற்று.

> "ஒன்ருக நல்லது கொல்
> லாமை; மற்று அதன், பின்
> சாரப் பொய்யாமை நன்று'

இப் பொதுநெறி அன்று முதல் காந்தியடிகளின் வாழ்க்கை நெறியாக அமைந்து நிலைத்தது. அவரது சிறப்பு நெறியாக ஒளிவிட்டது.

## உள்ளத்தே பதிந்துவிட்ட நிகழ்ச்சி

மேற்கூறிய நிகழ்ச்சியே, அகிம்சையின் உயர்வைக் காந்திக்கு உணர்த்தி அவர் உள்ளத்தில் ஆழப்பதியவைத்தது. எனவே, அன்முறை தலைகாட்டியபோதெல்லாம் தம் அரசியல் கிளர்ச்சியை உடனுக்குடன் நிறுத்தினார். இதன் மூலம் கத்தியின்றி இரத்தமின்றி உரிமைப்போர் நடத்தும் வழியை உலகிற்கு ஈந்தார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா
உயிரும் தொழும்"

காந்தியை மகாத்மாவாக எல்லோரும் தொழுததற்குக் காரணம் இப்போது விளங்குகிறதல்லவா?

"உள்ளத்தால் பொய்யா
தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம்
உளன்"

என்பது காலத்தாற் கறைபடாத கருத்துரை. அக் கருத்துரைக் கேற்ப, காந்தியடிகள் உலக மக்கள் அனைவர் உள்ளத்திலும், தம்மோடு மாறுபட்டவர்கள் உள்ளத்திலும் கூட இடம் தேடிக் கொண்டார். அத்தகையோரது ஆற்றலுக்கு முன்னே எது தடையாக நிற்கும்?

உள்ளத்தில் உண்மையொளி கொண்ட காந்தியடிகளின் வாக்கினிலே ஒளி உண்டாயிற்று. அது பல்லோரையும் கவர்ந்து இழுத்தது. அவர்காட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடவைத்தது. விடுதலையைத் தேடித்தந்தது. மிகக் குறைந்த செலவில் பெறற்கரிய பெரு நிலையைப் பெற்றுத்தந்தது.

காந்தியடிகளின்மூச்சு அகிம்சை, அகிம்சையின் அடையாளம் எது?

"இன்னாசெய் தாரை ஒறுத்
தல் அவர்நாண நன்னயம்
செய்து விடல்"

கொன்றன்ன கொடுமைகளைச் செய்தவர்களிடமும் காந்தியடிகள் காய்ப்புக் கொள்ளவில்லை. மாறாக அன்பு கொண்டார்; நன்மை செய்தார்.

தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து இந்தியரின் தன்மானப்போர், காந்தியாரின் தலைமையில் நடந்தது. அப்போது அவரும் அவரைப் பின்பற்றிய பலரும் சிறைப் பட்டனர்.

சிறையில் இருந்த காந்தியார், சிறைப்படுத்த ஆணையிட்ட ஸ்மட்ஸை நினைத்தார். வெறுப்போடு அல்ல, அன்பு உணர்ச்சியோடு. இன்னா செய்த அவருக்குத் தம்மாலான நன்னயம் செய்ய நினைத்தார்.

காந்தியடிகள் சால்பு மிக்கவர். சால்பாவது என்ன? தீமை செய்தவர்களுக்கும் இன்பம் செய்வது சால்பு.

"இன்னாசெய் தார்க்கும்
இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

வள்ளுவர் வாய்மொழி இது. இச்சால்பினையுடைய காந்தியார் சிறையிலே ஸ்மட்ஸுக்காக சீரான செருப்பு ஜதையொன்றைத் தைத்தார். உள்ளக்கனிவோடு அவருக்கு அனுப்பி வைத்தார். பகையா கொள்வார் ஸ்மட்ஸ்? தம் வாழ்நாள் முழுவதும் காந்தியைக் கண் கண்ட கடவுளாகப் போற்றினார். இதில் வியப்பேது?

"ஒறுத்தார்க்கு ஒருநாளை
இன்பம் பொறுத்தார்க்குப்,
பொன்றும் துணையும் புகழ்"

—என்னும் குறள் பொய்க்குமா? காந்தியடிகளின் மூலம் விளக்கம் பெறுகிறது, அது.

காந்தியடிகளின் இச்சால்பை. தனி மனித உறவில் மட்டுமா காண்கிறோம்? இல்லை. பொது நடவடிக்கைகளிலும் இது ஊடுருவுகிறது. இங்கே ஒன்றை நினைவுபடுத்திக் கொள்வோம். முதலாம் உலகப்போர் மூண்ட சமயம். அப்போது இந்தியர்களது உரிமைப் போர் நடந்து கொண்டிருந்தது. போர் நிலையிலும் இந்தியர்களது உரிமைகளை ஏற்றுக் கொள்ளாத நேச நாட்டினருக்கும் 'துணை நிற்க வேண்டும்: தொல்லை கொடுக்கக் கூடாது' என்பது நம் காந்தியடிகளாரின் வேண்டுகோள். இதுவும் அவரது சான்றாண்மைக்கொரு சான்று.

காந்தியார் பெற்ற பயிற்சி, தனி மனிதர்களுக்காக வழக்காட. ஆனால் செய்ததோ வேறு. நடத்தியதோ இந்திய நாட்டின் உரிமை வழக்கை. தம் சொந்த நலன்களைச் சிறிதும் கருதாது, தம்மையும் தம் சிந்தனையையும், உழைப்பையும் இந்தியாவிற்கும் இந்திய மக்களுக்கும் ஈந்தார் காந்தியார். ஒன்றைக்குறைத்து. மற்றொன்றை மிகுதிப்படுத்தி வழக்காடுவதற்குப் பதில்வாய்மைக்கே தம்மை ஈந்தார். காலமெல்லாம் ஈந்தார். அன்பிற்கு ஈந்தார். அடைக்குந்தாழ் அற்ற அன்பிற்கு ஈந்தார். நிறம், மொழி, சமய வேறுபாடின்றி மக்கள் அனைவருக்கும் தம்மை யீந்தார், காந்தியார்.

அன்பு தலைசிறந்தமனிதப்பண்பு. அது வளர வளரவே மனம் பண்படுகிறது. மனம் அன்பால் பண்படும் அளவே மாந்தர் மனிதத் தன்மையை அடைகின்றனர். மெய்யன்பிற்கு வரம்பு கிடையாது. அது எல்லா உயிர்களிடத்தும் சென்று பாயும். சிறந்த மனிதர் நிறைந்த அன்பினர். அத்தகையோர் அனைத்தையும் பிறர்க்காக வழங்குவர்.

"அன்பிலார் எல்லாம் தமக்
குரியர்
அன்புடையார் என்பும்
உரியர் பிறர்க்கு"

என்னும் வள்ளுவன் வழியைப் பின்பற்றி வாழ்ந்த காந்தியடிகளார் தம்மைச் சுட்டு வீழ்த்தியபோதும். இனியவே கூறி இறந்தார். காரணம் என்ன?

"எனைத்தானும் எஞ்ஞான்
றும் யார்க்கும்மனத்தானும்
மாணா செய்யாமை தலை"

என்னும் குறள் நெறியை ஏற்றுக் கொண்டவர் அடிகளார்.

"வையத்துள் வாழ்வாங்கு
"வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இதுவும் பொய்யாமொழி.

இம்மொழிப்படி நம்மால் மகாத்மாவாகப் போற்றப்படும் காந்தியடிகளின் அன்பு நெறியை, வாய்மை வழியை, அகிம்சை முறையை நாமும், நம் அக வாழ்விலும் புறவாழ்விலும் வழுவாது மேற்கொள்வோம். அதுவே நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய மெய்யான நன்றியாகும்.

[ கிராம நலம் ]

அடுத்த வருடம் முதல் தமிழ் நாட்டில்:

# அரசு வெளியிடும் பாட நூல்களையே பள்ளிகள் வைக்கலாம்

*

அடுத்த வருடத்திலிருந்து சென்னை ராஜ்யத்தில் உள்ள அங்கிகாரம் பெற்ற பள்ளிகள் அனைத்தும், அரசாங்கம் அமைத்துள்ள பாட புத்தக கார்ப்பரேஷன் பிரசுரிக்கும் பாடப் புத்தகங்களைத் தான் வகுப்புகளுக்கு வைக்க வேண்டும்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாடப் புத்தக கார்ப்பரேஷன் 1970—71 முதல் எஸ். எஸ். எல். சி. வரை பாட புத்தகங்களையும் பிரசுரிக்க ஆரம்பிக்கும். இந்த ஸ்தாபனத்திற்கு நிர்வாக டைரக்டராக நியமனம் செய்யப்பட்டுள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரி அரசாங்கத்திற்குச் சொந்தமான இந்தக் கார்ப்பரேஷன் வேலை செய்வது சம்பந்தமான விவரங்களைத் தயாரிப்பார். இந்த ஸ்தாபனத்தைப் பதிவு செய்வதற்கும் அவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்வார்.

முதல் அமைச்சர் புதிய ஸ்தாபனத்தின் தலைவராகவும், கல்வி அமைச்சர் உதவித் தலைவராகவும் இருப்பார்கள். ஒரு நிர்வாக ஆசிரியர் இருப்பார். டைரக்டர்கள் குழு, கார்ப்பரேஷனுக்கு ஆலோசனை கூறும்.

இப்போதுள்ள பாடப் புத்தகக் கமிட்டி நிபுணர் குழுவாகத் திருத்தியமைக்கப்படும். பல்வேறு வகுப்புகளுக்கான பாடங்கள் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் கமிட்டியில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## மந்திரி விளக்கம்

பாட புத்தகக் கார்ப்பரேஷனை அரசாங்கம் அமைத்திருப்பதன் நோக்கத்தைக் கல்வி அமைச்சர் திரு. மாதவன் விளக்கினர். அவர் மேலும் கூறினர்: உண்மையான ஆசிரியர்களின் தகுதிக்கு அங்கீகாரம் அளிக்கவும், புத்தகங்களை வெளியிடுபவர்கள் கூட்டு சேர்ந்து திட்டமிட்டு லாபத்தை அடித்துச் செல்லும் இப்போதுள்ள வழக்கத்திற்கு முடிவு கர்ணவுமே இந்தக் கார்ப்பரேஷன் ஏற்பட்டுள்ளது. இவைதான் கார்ப்பரேஷனின் உண்மையான நோக்கங்கள். பாட புத்தகக் கமிட்டி அங்கீகாரம் செய்த புத்தகங்களைத்தான் இப்போது பள்ளிகள் வகுப்புகளுக்கு வைக்கின்றன. ஆனல் புத்தகங்களைப் பிரசுரிக்கும் செல்வாக்கு உள்ளவர்கள், தமது ஆசிரியர்கள் மாத்திரமே அங்கீகாரம் பெறும்படிச்

செய்து வருகின்றனர். புத்தகம் வெளியிடுகிறவர்களின் ஆதரவு இல்லாத தகுதியுள்ள உண்மையான ஆசிரியர்கள் ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர். சில சமயங்களில் சில ஆசிரியர்களின் பெயர்களுடன் வெளியிடப்படும் புத்தகங்களை அந்த ஆசிரியர்கள் எழுதியிருக்க மாட்டார்கள். ஒரு சிலர் கூட்டுச் சேர்ந்து லாபம் அடிக்கும் இந்தப் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

## கையெழுத்துப் பிரதிகள்

திரு. மாதவன் மேலும் கூறினர்; உண்மையான தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு நன்மை ஏற்படும் பொருட்டு, பல்வேறு வகுப்புகளுக்குப் பல்வேறு பாடங்களைப் பற்றிய புத்தகங்களுக்கான கையெழுத்துப் பிரதிகளை அனுப்புமாறு ஆசிரியர்களைக் கார்ப்பரேஷன் கேட்டுக்கொள்ளும். பாடத்திட்டங்களைத் தொகுப்பதற்காக மத்ய சர்க்கார் அமைத்துள்ள கல்வி ஆராய்ச்சி, பயிற்சி தேசிய கவுன்சில் செய்துள்ள சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டே கார்ப்பரேஷன் பாடத் திட்டத்தை நிர்ணயிக்கும். பிரசுரிப்பதற்கும் பல்வேறு வகுப்புகளுக்குப் பாடங்களாக வைப்பதற்கும் நிபுணர் கமிட்டியே கையெழுத்துப் பிரதிகளைப் பொறுக்கியெடுக்கும். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரே ஒரு புத்தகத்தை வைப்பது கார்ப்பரேஷனின் நோக்கம் அல்ல. பல்வேறு ஆசிரியர்கள் எழுதிய 12 புத்தகங்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் வைக்கப்படும். குறை கூறுவதைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு. ஒவ்வொரு பாடத்திற்கும் இதுவரை ஒரு ஆசிரியரே நன்மை பெற்று வந்தார். இனி 12 ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

## கட்சிக் கொள்கைகள்

“பாடப் புத்தகங்களைப் பிரசுரிக்கும் பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்வதால், மிகவும் கட்டுப்பாடுகள் இருப்பதாகவோ அல்லது புத்தகங்களில் ஆளும் கட்சியின் கொள்கைகள், லட்சியங்கள் அடங்கியிருப்பதாகவோ குறை கூறப்படமாட்டாதா? என்று நிருபர்கள் கேட்டனர். மந்திரி பின் வருமாறு பதில் கூறினர்: “இத்தகைய பயங்களுக்கு ஆதாரம் இல்லை. நிபுணர்கள் அடங்கிய குழுதான்பல்வேறு கையெழுத்துப் பிரதிகளிடையே இருந்து புத்தகங்களைப் பொறுக்கி எடுக்கும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லது அரசாங்கமோ அந்தப் பணியைச் செய்யாது. பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட 12 செட்டுப் புத்தகங்கள் வகுப்புகளுக்குப்பாடபுத்தகங்களாகவைக்கப்படும். எந்த ஒரு ஜில்லாவுக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஆகவே இந்த ஏற்பாடு, சந்தேகங்களை நீக்கும். கட்டுப்பாடுகளுக்கோ இடம் இருக்காது.

## ஜீவாதார உரிமை

“தமது ஜீவனத் தொழிலில் அரசாங்கம் தலையிடுவதாகப்

பாடப் புத்தகம் வெளியிடுகிறவர் குறை கூறலாம் அல்லவா? அத்துடன் தமது ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்படுவதாகக்கூறி, அவர்கள் நீதிமன்றங்களில் வழக்காடக் கூடுமல்லவா?'' என்று நிருபர்கள் கேட்டனர்.

மந்திரி பின்வருமாறு பதில் கூறினார்: "புத்தகம் வெளியிடும் சிலர் பாதிக்கப்பட்டால், அதைத் தவிர்க்க முடியாது. மாணவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களின் நலன்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். தமிழ்நாடு சர்க்கார் புதிதாக எதையும் செய்யவில்லை. பீஹார், பம்பாய், பஞ்சாப், ஆந்திரப் பிரதேசம் முதலிய ராஜ்யங்களில் அரசாங்கங்கள் பாடப் புத்தகங்களை வெளியிடுகின்றன. அவற்றின் திட்டம் பற்றிய விவரங்கள் தமிழ்நாடு அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கின்றன. பஞ்சாபில் புத்தகம் வெளியிடும் சிலர் தமது ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்படுவதாகசுப்ரீம் கோர்ட்டில் வழக்குப் போட்டதில், பாட புத்தகங்களைப் பிரசுரிக்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என்று கோர்ட்டு தீர்ப்பு கூறியுள்ளது.

—"தினமணி"

---


## முக்கிய அறிவிப்பு

1969-70-ஆண்டுக்கு தொடர்ந்து எமது பாடப்புத்தகங்களை வைத்த எய்டட் ஆரம்பப் பாடசாலை (Aided Elementary Schools) களுக்கு மட்டும் தொடர்ந்து "ஆரம்பக்கல்வி" இனமாக அனுப்பிவைக்கப்படும். மற்றவர்கள் ரூ. 5/- சந்தா அனுப்பினலன்றி பத்திரிகை அனுப்பபடமாட்டாதுஎன்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறைந்தது ரூ. 100க்குக் குறையாமல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டும். ஆர்டர்கள் அனுப்பும்பொழுது, பார்சல் அனுப்ப வேண்டிய (Railway Station) ரயில்வே நிலையத்தின் பெயர், அல்லது (T.V.S. Lorry) நிலையத்தின் பெயர் தெளிவாக எழுதவேண்டும். *மானேஜர்,*

*ஆரம்பக்கல்வி நிலையம்*

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

*94-95, புதுத்தெருவு, மண்ணடி, சென்னை-1.*

# தெரிந்து கொள்ளுங்கள்

தொகுத்தவர் : கி. மா. பக்தவத்சலன்

●

உலக நாடுகள் (ஐ. நா.) சபையின் சார்பில் 1967-1968ம் ஆண்டில் மொத்தம் 2380 மாநாடுகள் நடந்தன. இந்த மாநாடுகளின் நிகழ்ச்சிகளை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகம் 25 கோடியே 60 லட்சம் பக்கம் இருக்கிறது. இதன் எடை 1738 டன்.

உலகிலேயே பழங்கள் சாப்பிடுவதில் இத்தாலியர்கள் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டுக்கு 153 கிலோ எடையுள்ள பழங்கள் சாப்பிடுகிறார்கள்.

உலகிலேயே காய்கறிகள் சாப்பிடுவதில் ஜெர்மானியர் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டுக்கு 321 கிலோ எடையுள்ள காய்கறிகள் சாப்பிடுகிறார்கள்.

இந்தியாவில் ஆங்கிலப் புத்தகங்களே அதிகமாக விற்பனை ஆகின்றன.

இந்தியாவில் தமிழ்ப் புத்தகங்கள் தாம் மிகக் குறைவாக விற்பனை ஆகின்றன.

இந்தியாவில் ஆந்திராவில்தான் நிறைய வைரங்கள் இருக்கின்றன.

நூலகங்களுக்குப் போய் புத்தகம் படிப்பவர்கள் உலகத்திலேயே பிரிட்டனில்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

இந்தியாவில் முதன் முதலில் சென்னையில்தான் பொது நூல் நிலையச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவின் முதல் ரூபாய் நாணயம் ஆங்கிலேயரான நான்காவது வில்லியம் அரசர் காலத்தில் வெளியிடப்பெற்றது.

உலகிலேயே காய்கறிகளும் பழங்களும் குறைவாகச் சாப்பிடுகிறவர்கள் இந்தியர்களே. இந்திய நாட்டினர் ஆண்டுக்கு $22\frac{1}{2}$ கிலோ எடையுள்ள காய்கறிகளும் $16\frac{1}{2}$ கிலோ எடையுள்ள பழங்களும் சாப்பிடுகிறார்கள்.

இந்தியாவிலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள மிகப் பெரிய நகரம் பம்பாய்தான். 1968-ம் ஆண்டு கணக்குப்படி இதன் மக்கள் தொகை 44,22,168 பேர்.

# புவியியல் கழகங்கள்

பள்ளிகளில், புவியியலைக் கற்பித்தலின் இன்றியமையாமையை, நாம் அனைவரும் உணர்ந்திருந்த போதிலும், அதனை செயல் திட்டங்களுடனும், விளையாட்டுமுறைகளிலும், கற்பித்தல் மிக அவசியம். 'புவியியல்' என்றபகுதியைப்பற்றிய கருத்து சென்ற நூற்றாண்டிலிருந்ததைக் காட்டிலும், இன்று மாறுபட்டுள்ளது. அறிவியலின் பயனால், இன்று இப்புவி ஒரே குடும்பமாக அமைந்துள்ளது. மனிதனால் பிரிக்கப்பட்ட பல நாடுகள், இன்று ஒன்றாக இணைந்து வாழ விழைகின்றன. ஒன்றின் வளத்திற்கு மற்றொன்று உதவ முன்வருகின்றது. கூட்டுமுயற்சியினால், விண்ணை அளக்கவும், திங்களில் வாழவும், விண்வெளியில் உலாவவும் மனிதன் திட்டமிடுகின்றான். எனவே, நம் பள்ளி பாடத்திட்டத்தில் உள்ள பல பாடப்பகுதிகளில், மனித இனத்தின் வரலாற்றையும் சூழ்நிலையால் மனிதன் அடைந்த மாற்றங்களைப்பற்றியும் கூற, புவியியலைக் காட்டிலும் பிறிதொரு பாடப்பகுதி எதுவும் தக்கதன்று, எனவும் துணிந்து கூறலாம். எனவே, புவியியலை, வெறும் புவியின் நில அமைப்பாகக் கருதாமல், அதில் வாழும் மக்களின் மரபுணர்வையும், மக்கள் ஒருவரோடொருவர் சார்ந்திருக்கும் தன்மையையும், நாடுகளிடையேயுள்ள கூட்டுறவையும் பற்றிய பகுதியாகக் கற்பித்தல் வேண்டும்.

இந்நோக்கினை, நன்முறையில், பள்ளிகளில் ஏற்படுத்த, புவியியல் கழகங்களை அமைத்து, பிள்ளைகளை 'செயல்களில்' ஈடுபடச்செய்தால் புவியியல் ஒரு நல்ல கவர்ச்சியான பாடமாகத் திகழும்.

**புவியியல் கழகங்கள்:-** வகுப்பின் தரத்திற்கும், மாணவர்களின் வயதுக்கும் ஏற்ப, புவியியல் கழகங்களின் நடவடிக்கைகள் அமைக்கப்படவேண்டும். இக் கழகங்கள், வகுப்பு வாரியாக அமைக்கப்பட்டு மாணவர்களின் விருப்பத்திற்கும், ஆர்வத்திற்கும் ஏற்ற செயல்களில் ஈடுபட்டால் நல்ல பயன் கிடைக்கும்.

**இப்புவியியல் கழகங்கள் ஈடுபடக்கூடிய செயல்கள் பின்வருமாறு:-**

1. புவியியல் பாடதிட்டத்தை ஒட்டி, கல்விப் பயணங்கள் அமைத்தல்.

2. புவியியல் கண்காட்சிக்காக, பொருட்களைச் சேகரித்தல்.

3. புவியியல் மூலைகள் (Geography corners) அமைத்தல்.

4. புவியியல் தொடர்புள்ள அண்மை நிகழ்ச்சிகளைப் பற்றி ஆராய மன்றங்களை அமைத்தல்.

5. புவியியல் தொடர்பான படங்களைச் சேகரித்தல்.

6. புவியியலில் எளிய பரிசோதனைகளைச் செய்தல்.

7. வகுப்பு அல்லது பள்ளி இதழ்களைத் தயாரித்தல்.

8. புவியியல் தொடர்பான பொருள்பற்றி, வல்லுநர்களை அழைத்துப்பேசஏற்பாடு செய்தல்.

9. வாரம் ஒரு முறை, வினாடி-வினா (Quiz Programme) நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

10. வாரம் ஒரு முறை (அ) மாதம் ஒரு முறை வகுப்புவாரியாக மாறுவேடப் போட்டிகளை அமைத்தல்.

11. அயல்நாட்டு நண்பர்களுடன் கடிதத்தொடர்பு வைத்தல்.

12 புவியியல்தொடர்பான விஞ்ஞானிகள், புதியநாடுகளைக் கண்டவர்கள்—போன்ற சான்றோர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை நடித்துக் காட்ட மன்றம் அமைத்தல்.

13. நம்நாட்டு, அயல்நாட்டு தபால் தலைகளைச் சேகரித்தல்.

14. தோட்டக் கலையைப் பயன்படுத்தி, தாவரங்களைத் தேசங்களின் தடிவங்களில் வளர்த்து அழகுபடுத்துதல்.

15. புவியியல் தலைப்புக்களைப் பற்றி, கையேடுகள் தயாரித்தல்.

16. புவியியல் தொடர்பான நிழற்படக்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

17. அயல்நாட்டு நண்பர்களை, பள்ளிகளுக்கு வரவழைத்துப் பேச வைத்தல்.

18. புவியியல் தொடர்புள்ள நூல்களைத்திரட்டி, வகுப்புவாரியாகநூலகங்களை அமைத்துப் பயன்படுத்துதல்.

இத்தகைய புவியியல் கழகங்களை அமைத்துச் செயல்களில், பள்ளிப்பிள்ளைகள் ஈடுபட்டால், 'புவியியல்' ஒரு விருப்பமான, ஆர்வத்தைத் தூண்டும் பாடமாக அமையும். 'கற்பித்தலும்' எளிதாக அமையும். குறுகிய மனப்பான்மை அகன்று, விரிந்த நோக்கும், பரந்தமனப் பான்மையும், நாடுகளிடையே நல்லுறவும் ஏற்பட வழிகோலும்.

—"தமிழகக் கல்வி"

# கல்வித்துறைச் செய்திகள்

## ஆசிரியர் உதவி நிதி

*மந்திரி மாதவன் அறிவிப்பு*

தமிழ்நாடு அரசாங்கம் ஆசிரியர்கள் உதவி நிதி யொன்று ஆரம்பிப்பதென்று முடிவு செய்திருக்கிறது. ராஜ்ய இன்ஷூரன்ஸ் திட்டத்தைப்போல இது அமையும்.

அமைச்சர் திரு செ. மாதவன் இன்று காலை இந்த விவரத்தை நிருபர்களிடம் கூறினார். ஆசிரியர்கள் உதவி நிதிக்கான நகல் திட்டம் தயார் என்று அவர் அறிவித்தார். இந்த நிதிக்கு மாணவர்கள், ஆசிரியர்கள், அரசினர் ஆகியவர்கள் பணம் செலுத்துவர் என்று அவர் கூறினார்.

## பெண்கள் கணக்குப்புலிகள்

சென்னை சர்வகலாசாலை நடத்திய எம்.எஸ்ஸி (கணிதம்) பரீட்சையில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் பேர் தேறாதது, தீவிரமாக யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயமாகும் என்று சில கல்வி நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஆனால், திருச்சியிலுள்ள சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியில் (பெண்கள் கல்லூரியில்) நிலைமை வேறு மாதிரியுள்ளது. பரீட்சை எழுதிய 18 பேரில் 17 பேர் தேறி விட்டனர். அதிலும் 13 பேர் முதல் வகுப்பு; 4 பேர் இரண்டாம் வகுப்பு. சென்னை சர்வகலாசாலை பூராவிலுமே 46 பேர் முதல் வகுப்பில் தேறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வு பெறும்படி செய்ய அரசுக்குள்ள அதிகாரம்

*தலைமையாசிரியர்கள் கோரிக்கை*

வேலூரில் சர்க்கார் செகண்டரி பள்ளியில் தலைமையாசிரியர்கள் கூட்டமொன்று திரு சுந்தரமூர்த்தி தலைமையில் நடந்தது. ஆசிரியர்களை 55 வயதிலும் 58 வயதாவதற்குள் எந்த நேரத்திலும் ஓய்வு பெறும்படிச் செய்வதற்குத் தான் மேற்கொண்டுள்ள அதிகாரத்தை சர்க்கார் கைவிடவேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொண்டது.

ஆசிரியர்களிடையே வேலையில்லாத நிலைமையை அகற்ற ஆசிரியர்கள் மாணவர் விகிதாசாரம் 1—35 என நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் கூட்டம் கோரியது.

## கல்யாண மாப்பிள்ளையும், விவசாயக் கல்வியும் !

'முதலில் பணத்துடன் கூடிய அழகிய பெண் வேண்டும் என்பான் மாப்பிள்ளை ஆகவேண்டியவன். கிடைக்கவில்லையென்றால்

கொஞ்சநாள் கழித்து பணம் வேண்டாம் அழகிய பெண் கிடைத்தால் போதும் என்பான். அதுவும் கிடைக்கவில்லை என்ற நிலை வந்தால் கல்யாணம் செய்து கொள்ள ஏதாவது ஒரு பெண் கிடைத்தால் போதும் என்பான். இந்த நிலையில் இருக்கிறது விவசாயக் கல்வி.

முதலில் மருத்துவக் கல்லூரியில் இடம் கேட்கிறார்கள். இல்லை என்றால் பொறியியல் என்பார்கள். அதுவும் இல்லையானால் விவசாயக் கல்லூரி யென்பார். இந்த நிலை மாற வேண்டும். மாறி வருகிறது. '' முதன் முதல் விவசாயக் கல்லூரியில் இடம் கேட்கும் நிலை இந் நாட்டில் ஏற்பட வேண்டும் '' என்று மாயவரத்தில் வானொலி நிலைய விழாவில் தமிழக முதல்வர் திரு கருணாநிதி பேசுகையில் குறிப்பிட்டார்.

## ப. யூ. பள்ளிகட்கு தனிக் கல்வி நிதி

### *தமிழக அரசு முடிவு*

அக்டோபர் 1ந் தேதி முதல் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்காகத் தனியாக ஒரு கல்வி நிதியை ஏற்படுத்துவது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது.

ஸ்தல ஸ்தாபன அமைச்சர் முத்துசாமி வியாழனன்று நிருபர்களிடையே இதை அறிவித்தார். ஆசிரியர்களின் சம்பளம் குறித்த நேரத்தில் பட்டுவாடா செய்யப்படுவதையும், இதர காரியங்களுக்காக பணம் செலவாகாமல் இருப்பதையும் உறுதி செய்யும் நோக்கத்துடன் இந்த முடிவு மேற் கொள்ளப்பட்டிருப்பதாக முத்துசாமி கூறினார்.

கடந்த காலத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் பணத்தை இதர காரியங்களுக்காகச் செலவிட்டு, ஆசிரியர்களுக்கு குறித்தக் காலத்தில் சம்பளம் தர முடியாமல் சிரமப்பட்டதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுவரையில் பொது நிதிக்காகவும், உற்பத்தி நிதிக்காகவும் ஸ்தல நிதிக் கணக்கு ஒன்று, இரண்டு என இரண்டு கணக்குகள் இருந்தன.

இப்போதைய முடிவைத் தொடர்ந்து கல்வியின் கீழ் எல்லா வருவாயும் ஸ்தல நிதி மூன்றாவது கணக்கில் இடம் பெறும்.

## பாடப் புத்தகங்கள் கார்ப்பரேஷன் நிறுவும் யோசனை

### *பிரசுரகர்த்தர்கள் ஆட்சேபம்*

அடுத்த கல்வியாண்டுமுதல் எல்லா பள்ளிப் பாட புத்தகங்களையும் பிரசுரிக்க விரைவில் பாட புத்தகங்கள் கார்ப்பரேஷன் அமைக்கப்படும் என்று கல்வி மந்திரி மாதவன் சமீபத்தில் அறிவித்துள்ளது குறித்து தென் இந்திய பிரசுரகர்த்தர்கள் சங்கத் தலைவர் திரு பி. ஸ்ரீனிவாஸன் கவலை தெரிவித்தார்.

எல்லாப் பாட புத்தகங்களையும் பிரசுரிக்கும் பொறுப்பை சர்க்காரே

மேற் கொண்டால் 700 பிரசுரகர்த்தர்களுக்கு வேலையில்லாமற் போய் விடும் என்றும் இத்தொழிலைச் சார்ந்துள்ள 1,500பேர் பாதிக்கப்படுவர் என்றும் அவர் இங்கு நிருபர்களிடம் தெரிவித்தார்.

8வது ஸ்டாண்டர்ட் வரையில் உள்ள ஆங்கிலம் தமிழ் பாட நூல்களைப் பிரசுரிக்கும் பொறுப்பை மட்டுமே ஏற்ற அப்போதிருந்த காங்கிரஸ் அரசாங்கம் மேற்கொண்டு பாட புத்தகங்களை வெளியிடும் பொறுப்பை சர்க்கார் மேற்கொள்ளாது என்று உறுதியளித்ததாகவும் அவர் சொன்னார்.

இக் கார்ப்பரேஷனை அமைக்க மத்திய சர்க்காரிடமிருந்து பிரேரணை வந்தாலும் தமிழக அரசு அதை எதிர்க்க வேண்டுமென்றும் இந்தத்திட்டத்தைக்கைவிடவேண்டும் என்றும் அவர் கூறினர்.

சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி அடுத்த சில தினங்களில் கல்வி அமைச்சரை சந்தித்து பாடபுத்தக கார்ப்பரேஷன் அமைக்கும் யோசனையைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்ளும் என்றார்.

நகரத் தலைமையாசிரியர்கள் சங்கத் தலைவர் திரு எஸ். நரசிம்மனும் பாட புத்தகங்கள் கார்ப்பரேஷன் அமைக்கும் பிரேரணைக்கு பலத்த எதிர்ப்பு தெரிவித்தார்.

—"தினமணி"


# புதுமுறை சங்க வாய்பாடு

**V. K. சேஷாத்திரி, B.A., L.T.**

**( Retired Deputy Inspector of schools. )**

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# செய்திக் கொத்து

## பிரிட்டனில் சினிமா செல்வோர் தொகை குறைகிறது

கடந்த ஆண்டில் பிரிட்டனில் சினிமாக் கொட்டகைகளுக்குப் படம் பார்க்க வந்தவர்களின் எண்ணிக்கை 23 கோடியே 70 லட்சம். இது 1967ல் இருந்ததை விட 10 சதவிகிதம் குறைவு. 1967ம் ஆண்டு எண்ணிக்கையோ அதற்கு முந்தைய ஆண்டை விட 8 சதவிகிதம் குறைவு.

இத்தகவல் பிரிட்டிஷ் வர்த்தக அமைச்சக அறிக்கை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

சினிமாக் கொட்டகைகளின் எண்ணிக்கையும் குறைந்தது. 1968ல் 1631 கொட்டகைகள் இருந்தன. இது 1967ல் இருந்ததைவிட 105 குறைவு.

விலைவாசி உயர்வினால் சினிமாவின் மவுசு குறைந்ததாகவும் கூற முடியாது. சினிமாவுக்கு வருவோரின் தொகையும் குறைந்தது, சினிமாக் கொட்டகைகளின் எண்ணிக்கையும் குறைந்தாலும் கொட்டகைகளின் மொத்த வசூல் கடந்த 12 மாத காலத்தில் மாறாமல் 5 கோடியே 80 லட்சம் பவுனாக உள்ளது.

## நிலாக்கல் அன்பளிப்பு

"அப்பாலோ 11' விண்வெளி வீரர்கள் நிலாவிலிருந்து கொண்டு வந்துள்ள கற்களின் விஞ்ஞானப் பரிசோதனை முடிந்த பிறகு, உலகின் அரசாங்கத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் நிலாவின் ஒரு கல் துண்டை அனுப்பி வைக்கப் போவதாக யு.ஸ். ஜனாதிபதி நிக்ஸன் கூறினார்.

நிலாவின் முதல் கல்லை இந்தோனேஷியாவின் ஜனாதிபதி சுஹார்ட்டோவுக்கு அனுப்பி வைப்பதாக நிக்ஸன் வாக்களித்தார்.

ஜனாதிபதி நிக்ஸன் இந்தோனேஷியாவுக்கு வந்த பிறகு இங்கு நடைபெறும் ஒரு கண்காட்சிக்கு வந்தார். அப்போது அவர் இந்தோனேஷிய ஜனாதிபதி சுஹார்ட்டோவிடம் மேற் கூறியவாறு கூறினார்.

## ஆளில்லாமல் தானாகச் சென்று மீன் பிடிக்கும் படகு

ஆளில்லாமல் தானாகவே சென்று மீனைப் பிடித்துக் கொண்டு கரை வந்துசேரும் ஒரு படகை ஆஸ்திரேலியர் ஒருவர் உருவாக்கியுள்ளார்.

"கடல் ராணி" எனப்படும் அப்படகை சிட்னியின் புறநகரான சாட்ஸ்வுட்டைச் சேர்ந்த ஜார்ஜ் ராண்டால் கட்டியுள்ளார்.

அவருடைய படகு ரேடியோ அலைகள் மூலம் தூரத்திலிருந்தே இயக்குவிக்கப்படுவதாகும். கரையில் உட்கார்ந்தபடி அப்படகை அவர் கடலுக்குச் செல்லும்படி செய்கிறார். கொடி மரத்துடன் இணைக்கப்பட்ட தூண்டிலில் ஒரு மீன் சிக்கியதும் தானாக அதைக் கரை திரும்பும்படி செய்கிறார். ஒவ்வொரு தடவையும் அது மீனைப் பிடித்துக் கொண்டு இப்படித் திரும்பும்.

அப்படகு வெறும் 4 அடி நீளம் தான் உள்ளது. அதில் 10 சி. சி. மோட்டார் என்ஜின் உள்ளது. நீரில் அப்படகு 15 நாள் வேகத்தில் செல்லக்கூடியது.

இதுவரை அப்படகு பிடித்துள்ள மிகப் பெரிய மீன் 10 ராத்தல் எடை கொண்டதாகும். அது பெரிதும் நடுத்தர அளவுள்ள மீன்களையே பிடிப்பதாகத் தோன்றுகிறது.

இப்படகைக் கட்ட அவருக்கு 150 டாலர்தான் செலவாகியது. அதை விடத் திருந்திய ரகத்தில் ஒன்றை உருவாக்கி, அதை விற்பனை செய்ய அவர் உத்தேசித்துள்ளார்.

## இரண்டே வயதில் சங்கீத மேதை

ரவிகிரானுக்கு 2 வயதுதான் ஆகிறது. ஆனால் எந்தப் பாட்டைக் கேட்டாலும் அது என்ன ராகம் என்பதைச் சரியாகச் சொல்லிவிடுகிறான். ராகம் மட்டுமல்ல என்ன தாளம் என்பதையும் சொல்லிவிடுகிறான்.

இதை யாராவது சொன்னால் நம்பத்தான் முடியாது. ஆனால், பல நிருபர்களின் எதிரில் சுமார் நூறு பாடல்களைப் பாடிக்காட்டி என்ன ராகம், என்ன தாளம் என்று ரவி கிரானைக் கேட்டபோது சரியாக பதில் சொன்னான்.

இதற்குக் காரணம் சங்கீத ஞானம் அவன் ரத்தத்திலேயே ஊறியிருப்பதுதான்.

பிரபல கோட்டு வாத்ய வித்துவான் திரு. நாராயண அய்யங்காரின் பேரனே அவன். அவனுடைய தகப்பனார் திரு. நரசிம்மனும் கோட்டு வாத்ய வித்வான்தான்.

என்னதான் சங்கீதம் ரத்தத்திலேயே ஊறி யிருக்கிறது என்றாலும் கூட, இரண்டு வயதில் இந்த அபார ஞானத்துக்கு அதுமட்டும் காரணமாயிருக்க முடியுமா?

ஒரு வேளை அவன் தாத்தாவின் மறு பிறவியோ என்றார் திரு. நரசிம்மன்.

—"தினமணி"

# கல்வித்துறை அறிவிப்புகள்

பொருள்; தமிழ்நாட்டுக்கல்விவிதிகள்—இடைநிலை டி.எஸ்.எல்.ஸி. தேர்வில் தனியாக கலந்து கொள்ளல்-நர்சரி, மாண்டிசோரி, கிண்டர்கார்டன் டி.எஸ்.எல்.ஸி. (தொடக்கநிலை—(Elementary Grade)பெற்றவர்களுக்கு சலுகைகளை அளித்தல் - ஆணைகள் பிறப்பித்தல்.

நர்சரி, மாண்டிசோரி, கிண்டர்கார்டன் பயிற்சிப் பள்ளிகளின் தொடக்கநிலை — (Elementary Grade,) முடிவுச்சான்றிதழ் (T. S.L.C.) பெற்றுள்ள நபர்கள் ஒரு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு சாதாரண இடைநிலைக்குரித்தான பயிற்சிப்பள்ளிமுடிவுச் சான்றிதழ் (T.S.L.C.) தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

நிபந்தனைகள் :- அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட தொடக்கநிலை பள்ளியிலோ அல்லது இடைநிலைப்பள்ளியிலோ 5 ஆண்டுகளுக்குக்குறையாத ஊழியம் ஆற்றியிருக்க வேண்டும்.

மேலும்; தமிழ்நாட்டுக் கல்விவிதிகள் 138-ன்படி குறிப்பிட்ட பொதுக்கல்வித் தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(அரசின் ஆணை எம்.எஸ்.எண். 472, கல்வி, தேதி 23—4—1969)

—“ தமிழகக் கல்வி ”

---

ஒரு கவிதையை இயற்றுவதிலே இருக்கிற அளவு பெருமையும் மதிப்பும் ஒரு நிலத்தை உழுவதிலேயும் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாத வரையில் எந்த நாடும் முன்னேற முடியாது.

—புக்கர் வாஷிங்டன்

# அம்புலி எனும் புதிர்

அம்புலி எங்கிருந்து வந்தது? அதன் வயதென்ன? எப்படி அது உருவாகியது? அதன் மேல் பரப்பை உருவாக்கிய ஆற்றல்கள் யாவை? அதில் உயிரினம் ஏதாவது உண்டா?

அம்புலியைப் பல நூற்றுண்டுகளாக மனிதன் ஆராய்ந்து வந்திருக்கிறன். அதன் மேல் பரப்பில் அடியெடுத்து வைத்துவிட்டான். எனினும் அம்புலி இன்னும் பெரும் புதிராகவே இருக்கிறது.

விஞ்ஞானிகள் அம்புலியை வியப்பூட்டும் வகையில் மிகத் துல்லியமாக வரைந்திருக்கின்றனர். விண்வெளிக் கலங்கள் தந்த கணக்கற்ற படங்களின் உதவிதான் இச்சாதனைக்குப் பெரிதும் காரணம். அம்புலியின் பௌதிகத் தன்மை விஞ்ஞானிகள் அறிவர். விண்வெளியிலே அதன் இயக்கங்களையும் மிகத் துல்லியமாகத் தெரிந்து வைத்திருக்கின்றனர். எனினும் சில முக்கிய வினக்களுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

அம்புலி வல்லுநர்களைத் திக்குமுக்காடச் செய்யும் பெரும் புதிர்கள் இவை. அமெரிக்காவின் அப்போலோ திட்டம், வரும் மாதங்களில் இப்புதிர்களை ஓரளவாவது விடுவிக்க உதவி செய்யும்.

அம்புலியைப் பற்றி இப்பொழுது இருந்து வரும் கருத்துக்களின்படி, அம்புலி சூரிய மண்டலத்தின் ஆதிப் பொருள்களில் ஒன்று. அது தோன்றியது முதல் அதன் மேல்புறம் அரிப்பிஞலோ காற்று மழையிஞலோ தாக்கப்படவில்லை.

எனவே அம்புலியின் தோற்றம், அதன் பௌதிக ரசாயனத் தன்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து கொண்டால் அந்த அறிவு, பூமியினுடையவும் சூரிய மண்டலம் அனைத்தினுடையவும் தோற்றத்தையும், ஆதி வரலாற்றையும் மனிதன் உணர்ந்து கொள்ள மிகக் கணிசமாக உதவும்.

டாக்டர் ஹெரால்டு ஸி. யூரே கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்; நோபல் பரிசு பெற்றவர்; உலகின் தலைசிறந்த அம்புலி விஞ்ஞானிகளில் ஒருவர். அவர் கூறியதாவது:

“அம்புலியிலிருந்து சிறு துண்டு

ஒன்றை என்னிடம் தாருங்கள் ; சூரிய மண்டலத்தின் வரலாற்றை நான் உங்களுக்குக் கூற முடியவாம்'',

அப்போலோ-11 விண்வெளி விமானிகள் இந்தச் ''சிறு துண்டை''த் தரப் போகின்றனர். டாக்டர் யூரேயும் பிற வல்லுநர்களும் அம்புலியின் மிகத் தொன்மையான ரகசியங்களைத் துலக்க முற்படுவர்.

கடந்த 350 ஆண்டுகளுக்குள்ளாகத்தான் அம்புலியைப் பற்றிய கட்டுக் கதைகள், குழப்பமான தகவல்கள் எல்லாம் விடுபட்டு ஒழுங்கு ஒன்று ஏற்பட்டது.

கலிலியோ 1610-ம் ஆண்டில் மாபெரும் பணி ஒன்றைச் செய்தார். செப்பமில்லாத தமது தொலைநோக்காடியை அம்புலியை நோக்கித் திருப்பினார். அவர் கண்டது இதுதான் ; ''தத்துவ அறிஞர்கள் பலர் நினைத்தது போல அம்புலியின் மேற்பரப்பு மழமழப்பாக இல்லை ; ஒரே சீராக இல்லை ; செம்மையான உருண்டை வடிவிலும் இல்லை. அதன் மேல் புறம் கரடு முரடாக இருக்கிறது ; மேடு பள்ளங்களும் குண்டு குழிகளும் நிறைந்து இருக்கிறது : பூமியின் மேல் பரப்பைப் போல் அல்லாமல் இல்லை—''

பின்னர், அம்புலி வல்லுனகர்கள் தம் கருவிகளையும் முறைகளையும் செம்மைப்படுத்தி ஆராயலாயினர். அம்புலியைப் பற்றி நிறையத் தகவல் சேகரித்தனர். ஆனால் அவை எல்லாம் அரைகுறையாகத் தான் இருந்தன.

அவர்கள் விட்ட குறைகள் பலவற்றை இந்த விண்வெளியுக விஞ்ஞானிகள் நிரப்ப வேண்டியிருக்கிறது. இந்த வேலையும் இன்று மும்முரமாகியுள்ளது.

வெறும் கண்ணால் பார்க்கையில் அம்புலி மழமழப்பாக இருப்பது போல் தோன்றும் ; வெள்ளித் தாம்பாளம் போல் காட்சி தரும். அதில் காணும் கரும் திட்டுக்கள் பற்பல கற்பனைகளுக்கு இடம் கொடுக்கின்றன ; ''அம்புலியில் மான்'' என்று சுட்டுவதும் இதைத்தான்.

அம்புலிக்கு மிக அருகிலிருந்து எடுத்த புகைப்படங்கள், அம்புலியில் இருக்கும் மலைகளையும் மேட்டு நிலங்களையும் படு குழிகளையும் பாழ் வெளிகளையும் பல்லாயிரக் கணக்கில் காட்டியுள்ளன.

பூமியிலிருந்து தெரியும் ஒளி மிகுந்த பகுதிகள்தான் மேட்டுத் தரைகள். கருமையாகக் காணப் பெறும் பகுதிகள்தான் தாழ்வான வெளிகள். லத்தீன் மொழியில் இவை மெரியா என்று அழைக்கப் படுகின்றன. அதாவது கடல்கள் என்று பொருள். 17-வது நூற்றுண்டில் இவை தண்ணீர் நிறைந்த பகுதி என்று கருதப்பட்டு வந்தது; அதுதான் இப் பெயருக்குக் காரணம்.

எரிமலைகளும் விண்கொள்ளி

விழ்ச்சிகளும் சேர்ந்து அம்புலியின் மேற்பரப்பை இவ்வாறு உருவாக்கின என்று பல விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

கணக்கற்ற நுண் கோள்கள் மோதி இந்தக் "கடல்களை" வெட்டின என்று கருதப்பெற்று வந்தது. அதற்கு முன் இந்த இடங்களில் எரிமலைக் குழம்பு அல்லது சாம்பல் நிரம்பியிருந்தது என்பர்.

அம்புலியில் நமக்குத் தெரியும் முன்புறத்தில் "கடல்கள்" தான் பெரும் பகுதியை அடைத்துக் கொண்டிருக்கின்றன. பின்புறம் ஒரு சில "கடல்கள் தான் இருக்கின்றன. அவை மிகச் சிறியவையும்கூட.

அம்புலியின் மேற்பரப்பு சாம்பல் நிறமான சிறு மணி போன்ற பொருளால் மூடப்பட்டிருக்கிறதென்று விஞ்ஞானிகள் பொதுவாக ஒப்புக் கொள்கின்றனர். இப்பொருள் சற்று ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையது. கிட்டத்தட்ட ஆற்று வண்டல் போல் இருக்கும். சோதித்துப் பார்த்ததில் நிலாத் தரை கனமான பொருளைத் தாங்கக்கூடியது என்றும் கண்டு கொள்ளப்பட்டது.

# அம்புலி அரிச்சுவடி

அம்புலியைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? அம்புலி பற்றிய சில அடிப்படைத் தகவல்கள் இவை.

அம்புலி கிட்டத்தட்ட (பந்து போல) உருண்டை வடிவமான ஒரு கோள். அதன் குறுக்களவு ஏறத்தாழ 2,160 மைல். இது கிட்டத்தட்ட பூமியின் குறுக்களவில் கால் பங்கு

அம்புலியின் ஈர்ப்பு விசை பூமியிலுள்ளதில் ஆறில் ஒரு பங்கு. பூமியின் பொருண்மையில் எண்பதில் ஒரு பங்கு பொருண்மையுள்ளது, அம்புலி.

அம்புலியின் அடர்த்தி நீரின் அடர்த்தியைப்போல 3.3 மடங்கு. பூமியின் அடர்த்தி 5.5 மடங்கு.

அவையனைத்தும் அம்புலி சிறியது; குறைந்த எடையுள்ளது என்று நன்கு புலப்படுத்துவதோடு, அதைச் சுற்றி ஏன் ஒரு காற்று மண்டலம் இல்லை என்பதையும் விளக்குகிறது. காற்றைப் பிடித்து வைத்துக் கொள்ளப் போதுமான ஈர்ப்பு விசை அங்கு இல்லை.

அம்புலி $27\frac{1}{3}$ நாளில் ஒரு முறை சுழல்கிறது; துல்லியமாக இதே காலத்தில் அது பூமியை ஒரு முறை சுற்றி வருகிறது. இதனால்

அம்புலியின் ஒரே பக்கந்தான் (உண்மையில் மொத்தப் பரப்பில் 59 சதவீதம்) எப்போதும் பூமியைப் பார்த்த வண்ணம் இருக்கிறது.

நீள் வட்டமான பாதையில் அம்புலி பூமியைச் சுற்றி வரும்போது, பூமிக்கு மிக அருகில் வருகையில் தொலைவு 2,21,460 மைல்; மிக எட்டத்தில் செல்லும்போது தொலைவு 2,52,710 மைல், சராசரியாக அது பூமியிலிருந்து ஏறக் குறைய 2,39,000 மைல் தொலைவில் இருக்கிறது.

பூமியைப் போலவே அம்புலிக்கும் சுயமாக ஒளி கிடையாது. சூரியனிடமிருந்து நேராகவும், பூமியில் பட்டுப் பிரதிபலிப்பதிலிருந்துமே அது ஒளி பெறுகிறது. அம்புலியில் ஒரு பகல் பூமியில் 14 நாள் : இரவும் அப்படியே.

அம்புலியில் காற்று மண்டலம் இல்லாததால். அங்கு கடும் தட்ப வெப்ப நிலை நிலவுகிறது. அம்புலிப் பகலில் வெப்பம் 120 டிகிரி சென்டிகிரேடு ; இரவில் குளிர் மைனஸ் 172 டிகிரி சென்டிகிரேடு.

மேல்பரப்பில் தண்ணீர் கிடையாது என்று நிலா வல்லுநர்கள் பொதுவாக ஒப்புக் கொள்கின்றனர்; ஆனால் அது பனிக்கட்டி வடிவத்தில் மேல் பரப்புக்கு அடியில் இருக்கக்கூடுமென்று சிலர் நினைக்கின்றனர்.

அம்புலியில் உயிரினம் எதுவும் இருப்பது அரிதினும் அரிது.

" நமது பொருட்களைத் தூய்மைப்படுத்துவதற்கு ஏற்ற இடம் அம்புலி ; அங்கு அவற்றைப் போட்டு வைக்கலாம் " என்று ஒரு சமயம் தலைசிறந்த அம்புலி விஞ்ஞானி ஒருவர் குறிப்பிட்டார். அந்த அளவுக்குக் கிருமிகள்கூட இல்லாத உலகம், அம்புலி.

"அமெரிக்கன் ரிப்போர்ட்டர்"

---

*இயந்திரங்கள் இன்றைய தினம் நம்முடைய எஜமானர்களாக இருக்கின்றன. இது கூடாது. அவை நமது அடிமைகளாக மாறவேண்டும் ; மாற்ற வேண்டும்.*

—ஹாவலாக் எல்லிஸ்

# ஜப்பான் சரக்கு!

[ இராம. அரங்கண்ணல், எம். எல். ஏ. ]

'ஜப்பான் சரக்கு!' என்று கிண்டல் செய்யப்பட்ட காலம் ஒன்றிருந்தது. குறைவான விலைக்குக் கிடைக்கும். கொஞ்ச நாட்களுக்கு மேல் தாங்காது, உறுதியாயிருக்காது என்று எல்லோரும் எண்ணியதுண்டு. 'ஜெர்மனியில் செய்தது'' (Made in Germany) என்றால், கெட்டியானது, தரமானது என்ற கருத்தும் 'ஜப்பானில் செய்தது'' என்றால், உதவாக்கரையானது என்கிற எண்ணமும், நம்மிடம் மட்டுமல்ல உலகெங்கும் இருந்தது.

## ஆனால்! ஆனல்!!

இன்று எல்லா நாட்டுச் சரக்கையும்விட மேன்மையானது, உறுதியானது, நாகரிகமானது என்கிற கருத்து எல்லோரிடமும் இப்போது ஏற்பட்டுவிட்டது. அமெரிக்காவைவிட-ஜெர்மனியைவிட— ஏன்? உலகத்திலுள்ள எந்த நாடுகளையும்விட-நேர்த்தியான சரக்கு ஜப்பான் சரக்கு எனப் புகழக்கூடிய பெயர் ஏற்பட்டிருக்கிறது. கடிகாரமானாலும், டிரான்சிஸ்டர் ரேடியோக்களானாலும், டெலிவிஷனானாலும். மோட்டார் சைக்கிளானாலும், மூன்று லட்சம் டன் (மூன்று லட்சம்! டன்!!) எடையுள்ள எண்ணெய் தூக்கும் கப்பலானாலும், 'ஜப்பானில் செய்யப்பட்டது'' (Made in Japan) என்றால் 'சீப்'பாயிருக்காது, தரமாக இருக்கும் என்கிற பெருமை ஏற்பட்டிருக்கிறது.

## சாதாரணமா, இது ?

அல்ல! அல்ல! எள்ளி நகையாடப்பட்டது, எல்லோரும் போற்றுமளவுக்கு இருபதே ஆண்டுகளில் மாறுதல் பெற்றுள்ளது என்றால் இந்த மகத்தான புரட்சியை வியக்காமலிருக்க முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஜப்பானுக்கு வந்த வெளிநாட்டு வியாபாரிகள் சின்னஞ்சிறு முதலீட்டைக் கொண்டு சீக்கிரம் இலாபம் தேடும் எண்ணங் கொண்டவர்களாயிருந்தார்கள். அதைப் பார்த்த ஜப்பானிய தயாரிப்பாளர்கள், வியாபாரிகளின் ஆசைகளை வைத்து, ''இப்படிப்பட்ட சரக்குகள்தான் விற்கும் போலிருக்கிறது!'' என்று சீப்'பான சாமான்களை உற்பத்தி செய்து குவித்தார்கள். வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கென்றே மட்டமான, சீக்கிரம் உடையக்கூடிய, பொருள்கள் தயாரிக்கும் இடங்கள் மண்டின.

இன்னொரு காரணமும் உண்டு. 1853-ல் டோக்யோ குடாவுக்குள் ஒரு அமெரிக்க இராணுவக் கப்பல் வந்தபோது ஜப்பானிய மன்னரும் அரசும் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். சீனா, இந்தியா, தென் கிழக்கு ஆசிய நாடுகளைப்போலத் தங்காது ஜப்பானும் மேற்கத்திய நாடுகளின் பிடியில் சிக்கிவிடாமலிருக்க வேண்டுமானால், தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக வலிவான இராணுவமும் கப்பற்படையும் இருக்கவேண்டும் என்று கருதி அந்த முயற்சியிலீடுபடலாயினர். இதனால் ஜப்பானுடைய 'மூளை' முழுதும் இராணுவத் தளவாடங்கள் பக்கமே சென்றது. இன்னொரு நாட்டுக்கு அடிமைப்படக்கூடாது என்று ஆசைப்பட்ட ஜப்பான் அருகிலுள்ள நாடுகளான பார்மோசா, மஞ்சூரியா, கொரியா போன்றவைகளை அடிமை கொண்டதோடு, இரண்டாவது உலகப் போரின்போது தாய்லாந்து பர்மா, மலேசியா, சிங்கப்பூர் முதலியவைகளையெல்லாம் வீழ்த்தி, இந்தியாவின் எல்லை வரையில் வந்து நின்றது.

இந்தியாவைவிட நாலில் ஒரு பங்கு மக்கள் தொகையை அதாவது 10 கோடிப்பேர் மட்டும் வாழும் ஜப்பான்—நித்யகண்டம் பூரணாயுசுபோல பூகம்பங்களைக் கொண்ட ஜப்பான்—வானத்திலிருந்து பார்த்தால் ஒருபெரிய தண்ணீர்த் தொட்டியில் தாமரை யிலையைப் போட்டது போல் காட்சியளிக்கும் ஜப்பான்—இரண்டாவது உலகப் போரின்விளைவாக தோல்வியுற்ற ஜப்பான், இந்த இருபதாண்டுக் காலத்தில் தனது வாழ்க்கைத் திசையைத் திருப்பிக் கொண்டு இந்த அளவுக்கு வாணிபத்துறையில் முன்னேறியிருப்பது விந்தை! விந்தை!

## எப்படி முடிந்தது?

''வீரத்தால் வெல்ல நினைத்தோம்; தோற்றோம்! நம்மை வீழ்த்திய அதே அமெரிக்காவை விவேகத்தால், நமது உழைப்பால் வீழ்த்துவோம்,'' என்கிற வெறி தவிர, அவர்களது இந்த வெற்றிக்கு, வேறு காரணம் எனக்குத் தென்படவில்லை. எந்தவிதமான ஆயுதத் தளவாடங்களும் ஜப்பான் செய்யக்கூடாது என்று போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா போன்ற நாடுகள் வலியுறுத்தியதன் காரணமாக தளவாட உற்பத்திக்கு வழியில்லாமற்போயிற்று. ஆனால், ஆலைகள்! அவைகளுக்கு வேலைவேண்டுமே?

மக்களுக்குப் பிடித்தமான சாமான்களை, கவர்ச்சியான வகையில், அமைதியாக, தயாரித்துத் தள்ளுவது என்று முற்பட்டார்கள் ஜப்பானியர்கள். மழையையும் மனித சக்தியையும் தவிர இயற்கை வளம் என்பது எள்ளளவும் கிடையாது ஜப்பானில்! இரும்பு—நிலக்கரி—இப்படிப்பட்ட எந்தப் பொருளும் இல்லாத நாடு ஜப்பான். இயற்கை வளமேயில்லாத நாடு. இன்று எல்லாப் பொருள்களையும் 'சப்ளை' செய்கிறது உலகுக்கு!!

ஆகா!

விமானம் செய்வதில் அமெரிக்கர்தான் சிறந்தவர்கள் என்பார்கள். இன்று மிஞ்சி விட்டது ஜப்பான்! கப்பல் கட்டுவதில் பெயர் போனவர்கள் பிரிட்டிஷார் என்பார்கள்—பிரிட்டிஷ் கம்பெனிக்கே பெரிய கப்பல் செய்து விற்கிறது ஜப்பான்! கடிகாரம் கண்டு பிடித்தவர்கள்—தரமான கடிகாரம் விற்பவர்கள்—என்கிற பெயர் ஸ்விட்சர்லாந்துக்கு உண்டு; ஆனால், இன்று, ஜப்பான் தலை சிறந்து நிற்கிறது ஸ்விட்சைவிட!! ஆகாயவிமானம், கப்பல், கடிகாரம் ஆகியவைகளில் மட்டுமல்ல; மிகப் பெரிய இயந்திரமானாலும், மிகமிகச் சாதாரண பொருளானாலும் போட்டி போட்டுக்கொண்டு 'முதலிடம்' பெற்றுவிட்டது ஜப்பான். இதில் வேடிக்கை—இரும்போ, நிலக்கரியோ, செம்போ, ஈயமோ — வெளிநாட்டிலிருந்து தான் வரவேண்டும்! தன்னாட்டில் கிடையாது!!

இரண்டாவது போர் முடிந்ததும் ஜப்பானில் கொண்டுபோய் 5 லட்சம் அமெரிக்கத் துருப்புகள் வைக்கப்பட்டார்கள். வாங்குவதற்கென்று ஒருபொருளும் கடைகளில் இல்லாமல் திண்டாடினார்களாம் 20 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள்! ஆனால், இன்று ஜப்பானியக் கடை வீதிகளில் ஏராளமான அமெரிக்கர்களைப் பார்க்கலாம்!!

விழிப்பு மிக்க ஜப்பானியத் தயாரிப்பாளர்கள், போருக்குப்பின்னுள்ள சூழ்நிலையைப் புரிந்து கொண்டார்கள். குண்டுகளும், பீரங்கிகளும் செய்து கொண்டிருந்த தொழிலாலைகள் அழகு அழகான துணிகளையும், அதுபோன்ற மற்ற பொருட்களையும் செய்யும் இயந்திரக் கூடங்களாகத் திருத்தியமைக்கப்பட்டன! (**திருத்தியமைக்கப்பட்டன**—என்று ஒரு வார்த்தையில் எழுதுகிறோம். *ஆனால், சாதாரணமான காரியமா?* அது!!)

காமிராக்கள், பூதக்கண்ணாடிகள் செய்வதில் ஜெர்மனிக்குப் போட்டியாக ஜப்பான் உருப்பெற்றது ரசமான வரலாறாகும். போரின் போது, விமானத்திலிருந்து எதிரிகளின் ஊர்களைப் பார்க்க, பீரங்கிகள் வழியாக எதிரிகளின் முகாம்களைப் பார்க்க, நுணுக்கமான சக்திவாய்ந்த பூதக் கண்ணாடிகளை, விமானப்படைக்கும் கப்பற்படைக்கும் ஜப்பான் தயார் செய்தது. போர் முடிந்ததும் ஜப்பானின் பெரிய கம்பெனிகளில் ஒன்றான **ரிகோன் கம்பெனி**, 25,000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய நேர்ந்தது. இந்த நெருக்கடியைத் தவிர்க்க மேற்படி கம்பெனி, அதே தொழிலாளர்களை வைத்து, நல்ல பூதக்கண்ணாடிகளைக் கொண்ட காமிராக்களைச் செய்ய ஆரம்பித்தது. இன்று ஜப்பானியக் காமிராக்கள் ஜெர்மன் காமிராக்களைத் தோற்கடித்து விட்டன. என்னிடம் ஒரு காமிராவைக் காட்டினார்கள், ஐந்து நிமிடத்துக்குள் கலர்ப்படம்

எடுத்து அதன் பிரதியை 'பிரிண்ட்' செய்து உடனே நம் கையில் கொடுத்து விடுகிறார்கள்.)

1920 லிருந்து 1930 வரையில் போர்த்தளவாடங்களைச் செய்து கொண்டிருந்த பல கம்பெனிகள் மோட்டார்சைகிள், கார்கள், ரேடியோக்கள், என்று செய்ய ஆரம்பித்தன. அழிக்கும் பொருள்களைச் செய்து கொண்டிருந்த ஜப்பான் ஆக்கும் பொருள்களைச் செய்து குவித்தது! இன்று எங்கும் அதன் பொருள்கள்!!

## வேலை நிறுத்தம் உண்டா?

இந்தப் 'புரட்சி' எப்படி ஏற்பட முடிந்தது என்பதை நாம் எண்ணிப் பார்த்தாகவேண்டும். எப்படி ஜப்பானியப் பொருளாதார அமைப்பு இருக்கிறது என்பதை நாம் முதலில் பார்ப்போம். ருஷியாவைப்போல பொதுவுடைமை நாடில்லை ஜப்பான்! முதலாளித்துவ சமுதாய அமைப்பு என்றே சொல்லவேண்டும். என்றாலும், பல முதலாளித்துவ நாடுகள் பெற முடியாத இந்த 'வளர்ச்சி' ஜப்பானில் மட்டுமே எப்படி ஏற்பட்டது. அமெரிக்காபோன்ற முதலாளித்துவ நாடுகளில் தனியார் துறைக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. தனிப்பட்டவர்களும், தனிப்பட்ட முதலாளிகளின் கம்பெனிகளும் தங்களுக்குள் போட்டிபோட்டுக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வது என்கிற சித்தாந்தத்தை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜப்பானிலும் தனிப்பட்ட முதலாளிகள்தான் இருப்பவர்கள்! சரியாகச் சொன்னால் ஜப்பானின் பொருளாதாரமே ஏழே ஏழு கம்பெனிகள் வசம் இருப்பதாகக்கூடச் சொல்கிறார்கள். இருந்தும், பொதுவுடைமை நாடுகளில் மட்டுமே காணமுடியும் என்று கருதப்படுகிற உத்வேகமும் உணர்வும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குச் செல்வாக்கேயில்லாத ஜப்பானில் எப்படிக் காணமுடிகிறது? இது, உய்த்து உணரவேண்டிய ஒரு அரசியல் வாழ்வாகும்.

**தொழில் என்பது தனிப்பட்ட முதலாளியால் நடத்தப்பட்டாலும் அது அவனுக்காக வல்ல; அது அவனுடைய சொந்தக் காரியமல்ல; தேசக் காரியம்-நாட்டுக்கான வளர்ச்சிக்குச்செய்யப்படுகிற காரியம் என்று ஜப்பானியர்களால் கருதப்படுகிறது.**

**சர்க்கார்—வாணிபத் துறை—தொழிலாளர்கள் என் போர் சண்டைபோடும் பங்காளிகளல்ல; சகாக்கள் என்று ஜப்பானில் கருதப்படுகிறது.**

இந்த ஆச்சரியமான உணர்வு, தேசிய உணர்வுபோல, ஜப்பானியன் ஒவ்வொருவன் மனதிலும் வேரூன்றியிருப்பதால், வேலை நிறுத்தம் போன்றவைகள் காண அரிதாகின்றன.

## முதலாளியின் பங்கு

இப்படிப்பட்ட உணர்வு சராசரி

ஜப்பானியனிடம் மட்டுமல்ல; அவனை வேலை வாங்கும் முதலாளி களிடமும் இருப்பதுதான் ஆச்சரி யத்திலும் ஆச்சரியம்! தொழிலாளர் களைச் சுரண்டிச் சுரண்டி வாயி லடித்து வயிற்றிலடித்து, தனது பணப் பையைப் பெருக்கிக் கொள்வான் முதலாளி என்பார்கள் கம்யூனிசத் தத்துவவாதிகள். இயற்கையாக நாம் எதிர்பார்க்கக் கூடியதும் இதுதான். ஆனால் ஜப் பானில், சாதாரண ஜப்பானியனுக் குள்ள உணர்வு முதலாளிகளுக்கும் இருக்கிறது!!

ஒருவன் ஒரு கம்பெனியில் வேலை செய்யச் சேர்வது ஏன்? வாழ! எனவே, வாழ்க்கையில் அவனும் மனிதனாக எல்லாவற்றை யும் அனுபவிக்க வசதி செய்து கொடுப்பது தன்னுடைய கடமை யென்று கம்பெனி முதலாளி கருது கிறான். **ஆண்டு போனஸ், குடும்பத்தில் நபர்கள் அதி கரித்தால் அதன்படி அலவன் சுத் தொகை, குழந்தைகள் படிப்புத் தொகை, பிரயாணச் செலவு, டாக்டர் செலவு, திடீரென ஆபத்து ஏற்பட்டால் நட்ட ஈடு** போன்ற பல சலுகை கள், அங்கே தாராளமாக வழங் கப்படுகின்றன, இன்னுமொரு ஆச்சரியம்!

இங்கே ஒருவனை வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்புவதென் றால் 'அல்வா' சாப்பிடுவதுபோல நிர்வாகம் எண்ணுகிறது அல்லவா? அங்கு அப்படியில்லை! **ஒரு மகனை வீட்டை விட்டுப் போகச் சொல்லும் தந்தையைப்போல வருந்தி வருந்தித்தான் வெளியே அனுப்புகிறது நிர் வாகம்.**

ஹொண்டா மோட்டார் கம் பெனியின் முதலாளி **சொய்க்கிரா ஹொண்டா** என்பார் சொல்கிறார், "ஒரு முதலாளியின் கடமை, தொழில் எப்படி நடக்கும், எப்படி யெப்படி தொழிலை முன்னுக்குக் கொண்டு வரலாம் என்று முன் கூட்டியே ஆலோசனை செய்து அதற்குத் தக்கபடி தன்னைத் தயாரித்துக் கொள்வதாகும். வேலை குறைந்துவிட்டது என்று பல தொழிலாளர்களை அவன் வீட் டுக்கு அனுப்பினால், அனுப்பப்பட வேண்டியவர்கள் அவர்களல்ல, அந்த முதலாளிதான்!" எவ்வளவு ஆழமானசொற்கள் இவை. எண்ண எண்ண எவ்வளவு கருத்தாழம் தென்படுகின்றது.

## தந்தை மகன் உறவு

ஜப்பானிய உற்பத்திப் பொருள் கள் தரமாக விளங்கக்காரணமே முதலாளிகளுக்கும் தொழிலாளி களுக்குமிடையிலுள்ள இந்த தந்தை-மகன் உறவுதான். அடுத்த காரணம், சர்க்காருடைய ஒத் துழைப்பு. **பல நாடுகளில் தொழிலாளிகளுக்கும் முதலா ளிகளுக்கும் இடையிலுள்ள 'பாலம்' போலத்தான் சர்க்கார் இருக்கிறது.** ஆனால் ஜப்பானில், சர்க்காரின் பணி, நிர்வாகத்துக்கு ஆதரவாகவும், தொழிலாளிக்குத் தோழனாகவும் இருந்து, உற்பத்திப் பெருக்கம் பெருகச் செய்வது தான்!!

சரக்கின் தரம் கெடாமலிருப்பதற்காக 1967ல் ஏற்றுமதி கட்டுப்பாடு சட்டம்' ஒன்றை ஜப்பானிய அரசு செய்தது, ஜப்பானியத் தொழிலாளர்கள் முழுதும் இதற்கு ஆதரவு கொடுத்தார்கள். வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள்கள், அரசினரால், பல தரப்பட்ட சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பிறகே, "ஜப்பானில் செய்தது!" (Made in Japan) என்கிற லேபிள் குத்தப் படும்.

நம் ஊர்க் கதையைக் கொஞ்சம் பார்ப்போம்!

வெளிநாடுகளுக்கு விற்குமுன் மாதிரிக்கு ஒரு சரக்கு காண்பிப்பார்களாம். நல்ல சரக்காயிருக்குமாம்! வெளிநாட்டில், கப்பலிலிருந்து இறக்கிப் பார்த்தால், அந்த அளவுக்குத் 'தரம்' இருக்காதாம். ஒருமுறை, சரக்கு என்று மூட்டையைப் பிரித்தபோது, வெறும் கல்லும், தேவையில்லாத பொருள்களும்கூட இருந்தனவாம்!! நம்மூர் கதை இது.

ஜப்பானில், தனது சரக்குக்குப் பெயர் வரவேண்டும் என்பதில், தொழிலாளிக்கும் அக்கறையிருப்பதால், அவனை ஏமாற்றி எதுவும் செய்ய முடியாது, முதலாளியால். அது மட்டுமல்ல!

'போர்மெனும்' தொழிலாளிகளும் ஒரு மாதத்துக்கு ஒரு முறையோ அல்லது பல முறைகளோ தாங்களாகவேகூடி, தங்களது தயாரிப்புகளைப் பற்றி விவாதிக்கின்ற ஒருமுறை எல்லா இடங்களிலும் உள்ளது. இதனால் அவர்களுக்குள்ளாகவே குற்றங் குறைகளை நிவர்த்தித்துக்கொண்டு, அதிருப்தி விருப்பம் ஆகியவைகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. வேலைசெய்யும் நேரத்திலேயே அப்படிக் கூடிப் பேசலாம் என்று முதலாளிகளும் அனுமதித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு, "தர உயர்வு வட்டம்" (Quality control circle) என்று பெயர். கிட்டத்தட்ட பதினாயிரத்துக்கு மேற்பட்ட வட்டங்கள் எல்லாத் தொழில்களிலும், இன்று இருக்கின்றனவாம்.

## ஒரு சான்று!

**மட்சூஷிடா எலக்டிரிக் கம்பெனி** என்பது காருக்கு வைக்கின்ற ரேடியோக்களைச் செய்கின்ற கம்பெனியாகும். இந்தக் கம்பெனியின் "வட்டம்" கூடி, ரேடியோவில் ஒரு கம்பியை எப்படி வளைப்பது என்பது பற்றி ஆராய்ந்தது. வட்ட உறுப்பினர்கள் ஒரு பாகத்தில் ஏற்பட்ட மிக மிக நுண்ணிய பிழையைக் கண்டுபிடித்தார்கள்! அந்தப் பிழை ஏற்பட்டதற்குக் காரணம் "ஸ்க்ரு டிரைவர்" என்று தெரிந்தது. இதைக் கண்டுபிடித்தது பெரிய இன்சினீயர்களல்ல, அங்குப் பணிபுரியும் மூன்றே மூன்று பெண்கள்!!

—"காஞ்சி"

# எழுத்துலக மன்னர் டிகன்சு

[ திருப்பத்தூர் கி. வீரமணி ]

✻

நள்ளிரவு. இலண்டன்மாநகரம் அமைதியில் ஆழ்ந்திருக்கிறது. இருபது வயது நிரம்பிய ஒருவன் சுற்றும் முற்றும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி—வெட்கம் கலந்த ஒருவித அச்ச உணர்வோடு வீதியில் நடந்து வருகிறான். தெருக் கோடியில் ஒரு அஞ்சற்பெட்டி. அருகே வந்து நின்று சுற்றிலும் கண்ணோட்டம் விட்டு விட்டு. யாரும் பார்க்கவில்லை என்ற தைரியத்தில், பெட்டியில் ஒரு உறையைப் போட்டுவிட்டுத் திரும்புகிறான். தன் செயலை யாரும் பார்த்துவிடக்கூடாது என்ற அச்சம் அவனுக்கு.

ஒருநாள், தான் எழுதியது பத்திரிகையில் வெளிவந்திருப்பதைக் கண்டான். தனது எழுத்துக்களை அச்சிலே கண்ட மகிழ்ச்சியால் ஆனந்தக்கண்ணீர் வடித்தவனாக வீதிகளிலே ஓடித்திரிந்தான். தான் எழுதியதைப்பகல் நேரத்தில் அஞ்சலில் சேர்க்கக் கூச்சப்பட்டவனும், தனது எழுத்துக்களை முதன் முதலாக அச்சில் கண்டு ஆனந்தக் கண்ணீர்விட்டவனுமான அந்த வாலிபன்தான் உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாவலாசிரியரான சார்லஸ் டிகன்சு.

வழக்கொன்றின் காரணமாக தந்தை சிறை சென்றுவிடவே, எனது எட்டாவது வயதிலேயே குடும்பத் தலைவனுக்கு உரிய பொறுப்பு டிகன்சுக்கு ஏற்பட்டு விட்டது. அந்த வயதிலேயே உழைக்க ஆரம்பித்துவிட்டார். இதனால், பள்ளிப் படிப்பைத் தொடர முடியாது போயிற்று. ஒரு தொழிற்சாலையில் 'லேபில்' ஒட்டும் வேலையில் சேர்ந்தார். பின்னர், வேறு இடத்தில் 'குமாஸ்தா' வேலை செய்தார். 'சுருக்கெழுத்து'ப் பயின்று பாராளுமன்றத்தில் 'ரிப்போர்ட்டராக'ப் பணிபுரிந்தார். டிகன்சு சிறுவயதிலேயே கூரிய அறிவும், கற்பனை வளமும் மிக்கவராக இருந்தார். இலக்கியத் துறையில் மிக ஆர்வம்கொண்டிருந்தார். தனதுஓய்வைப்படிப்பதிலும், எழுதுவதிலும் செலவிட்டார்.

"பிக்விக் பேப்பர்ஸ்"—இந்த நூல்தான் டிகன்சை நாடறியச் செய்தது. தொடராக வந்த நூல் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தமக்கேயுரிய கிண்டலும் கேலியும் கலந்த நடையில், சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளையும், ஏழை மக்களின் உயர்ந்த பண்புகளையும் எழுதி மக்களைச் சிந்திக்கவைத்தார். டிகன்சின் நூல் வடிவம் பெற்ற முதல் காவியம் இதுதான். தொடர்ந்து, 'ஆலிவர் ட்விஸ்ட்' 'டேல் ஆப் டூசிட்டீஸ்' 'டேவிட் காப்பர் பீல்ட்' 'தி ஓல்ட் க்யூரியாசிடி ஷாப்' 'நிகோலஸ் நிகின்பி' போன்ற

நூல்கள் வந்து இலக்கிய உலகில் இவரது பெயரை ''சாகாவரம்'' பெறச் செய்துவிட்டன. கிறிஸ்துமஸ் பண்டிகை தினங்களில் பாடப்படும்- ''கிறிஸ்துமஸ் கரோல்'' என்னும் டிகன்சு இயற்றிய கீதங்கள் இவருக்குத் தனிப்புகழைத் தந்தன

ஆரம்ப காலத்தில் டிகன்சு எழுதிய கதைகளுக்குப் பத்திரிகைகள் பணம் தரவில்லையென்றாலும், இவரது எழுத்தாற்றலை உலகம் உணரத் தொடங்கியபோது, ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று பவுன் விதம் கொடுத்தது. ஏழ்மையால் வாடிய டிகன்சு இப்போது எழுத்தால் பணம் குவித்து தமது ஏழ்மையை விரட்டினார். தான் சிறுவனாக இருந்தபோது எந்த மாளிகையில் வாழ விரும்பினாரோ, அதே ''கேட்ஸ்ஹில்'' என்னும் அழகிய மாளிகையை வாங்கி அதில் குடிபுகுந்தார். அந்த மாளிகையை டிகன்சு வாங்கிய கதையே மிக வியப்பானது. சிறுவனாக இருந்த போது ஒரு நாள், தந்தையுடன் சென்று 'கொண்டிருந்தபோது டிகன்சு, 'கேட்ஸ் ஹில்' மாளிகையைக் கண்டு அதன் அழகில் தன் மனதைப் பறிகொடுத்து விட்டார். ''அந்த மாளிகையில் நாம் வாழவேண்டும், அப்பா'' என்று தனது ஆவலை தந்தையிடம் சொன்னார். அதைக் கேட்டு நகைத்த தந்தை ''மகனே, ஏழைகளான நாம் அம்மாளிகையில் வாழ நினைப்பது முடியுமா...?'' என்றார். ''ஏன் அப்பா முடியாது...?'' என ஏக்கத்துடன் கேட்டார் டிகன்சு. ''முடியாது எனச் சொல்ல முடியாது; மகனே! நீ, நினைத்தால் முடியும். விடா முயற்சியுடன் உழைத்தாயானால், என்றாவது ஒரு நாள் அதில் வாழலாம்'' என்று கூறினார். தந்தையின் அறிவுரையை ஏற்று முயற்சியுடன் உழைத்து அந்த மாளிகையை வாங்கித் தனது நீண்ட நாளைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார் டிகன்சு.

டிகன்சு ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததினால். இவர் ஏழைகளிடம் தனித்த அன்பும், மதிப்பும் கொண்டிருந்தார். ஏழை எளியார், அநாதைகள் ஆகியோரின் உள்ளக் குமுறல்களையும், அவர்கள் எப்படி வாட்டி வதைக்கப் படுகிறார்கள் என்பதையும் தமது எழுத்துக்களால் சித்திரித்துக் காட்டினார். இதனால், இவர் ''ஏழைகளின் நண்பர்'' எனப் போற்றப் பட்டார். இவரைச் சுற்றி மக்கள் கூட்டம் எப்போதும் சூழ்ந்திருந்தது.

நகைச்சுவைப் பாணியில் டிகன்சு எழுதினாலும், போகப் போக இவரது எழுத்துக்கள் படிப்போரைக் கண்ணீர் விட்டு அழச் செய்தன. படிப்போரை மட்டும் இவர் அழச் செய்யவில்லை. எழுதும் இவரே அழுவதுண்டு. ''தி ஓல்ட் க்யூரியாசிடி ஷாப்'' என்ற நவீனத்தில் 'நெல்' (Nell) என்னும் பெண் இறந்து விடுகிற பகுதியை டிகன்சு எழுதும்போது கண்ணீர் விட்டுக் கதறி அழுதாராம். நீண்ட நாட்கள் வரை இந்தச் சோகம்

அவரை விடவேயில்லை. இந்த நவீனத்தை தொடர்கதையாக எழுதிவந்தார். 'நெல்' மரணத் தறுவாயில் இருப்பதாக டிகன்சு எழுதிய போது, ''அவனைக் கொல்லாதீர்கள்'' என்று எண்ணற்ற கடிதங்கள் நாடெங்கிலுமிருந்து அவருக்கு வந்தனவாம். அந்த அளவிற்கு உணர்ச்சிகரமான பாத்திரங்களை டிகன்சு உருவாக்குவார். டிகன்சு எழுதத் துவங்கினால் அதிலேயே ஆழ்ந்துவிடுவார். கதை எழுதி முடித்துவிட்டு வரும் போது, ஒரு கொலைகாரனைப் போலவே அவர் தோற்றமளிப்பாராம். இதைப் பற்றி டிகன்சு, ''என்னுடைய கதையில் வரக் கூடிய கதாபாத்திரங்கள் நான் அவர்களை எழுதி முடிக்கும் வரை என்னை உறங்கவோ, உண்ணவோ, ஓய்வு கொள்ளவோ விடுவதில்லை'' எனக்கூறியுள்ளார். தான் எழுதிய கதைகளில் இருந்து சில பகுதிகளை மக்கள்முன் படித்துச் சொற்பொழிவு செய்வார். டிகன்சின் சொற்பொழிவு என்றால், மக்கள் கூட்டம் பெருந்திரளாகக் கூடிவிடுமாம்.

1812-ம் ஆண்டில் லாண்ட் போர்டில் ஏழைக் குடும்பமொன்றில் பிறந்த அவர் தமது 58-வது வயதிலேயே இறந்துவிட்டார். ''வெஸ்ட் மினிஸ்டர் அபே''யில் உள்ள இவரது கல்லறை இன்றும் இலக்கிய அன்பர்களால் வணங்கப் பட்டு வருகின்றது.

—'' காஞ்சி ''


" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-00

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-50

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of income

தபால் செலவு பிரத்தியேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 15 nP.
50 பாரங்களுக்கு 30 nP.
75 பாரங்களுக்கு 50 nP.
100 பாரங்களுக்கு 70 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ரூபாய்க்கு 3 ந. பை.
விற்பனை வரியுண்டு.

# நெல்—உமியில் இருந்து 6 வகைத் தொழில்கள்!

## ஆதித்தனார் தகவல் !!

"நெல், உமி, தவிடு ஆகியவைபோன்ற பொருள்களைக் கொண்டு, 6 வகையான தொழிற்சாலைகளை நடத்தமுடியும்" என்று கூட்டுறவுத்துறைஅமைச்சர்சி. பா. ஆதித்தனார் கூறினார்.

### புது மாதிரி அரிசி மில்

அவர், திருவாரூரில் கூட்டுறவு துறையில் நடைபெறுகிற புதுமாதிரி அரிசி மில்லையும், தவிட்டில் இருந்து எண்ணை தயாரிக்கிற தொழிற்சாலையையும் பார்வையிட்டார்.

அவர். நிருபர்களிடம் கூறியதாவது:—

"புதுமாதிரி அரிசி மில்களை ஓட்டுவதால் அரிசி சேதாரம் ஆவதில்லை. பழைய மாதிரி மில்களில் எவ்வளவு அரிசி கிடைக்கிறதோ அதைவிட, 100க்கு 4 சதவீதம் அதிக அரிசி கிடைக்கிறது.

### 6 தொழில்கள்

இதுமட்டும் அல்லாமல் அரிசி தவிர மற்ற தவிடு, உமி போன்ற பொருள்களைக் கொண்டு. 6வகையான தொழில்களை நடத்த முடியும்.

அந்தத் தொழில்களாவன;—

(1) தவிட்டில் இருந்து எண்ணை தயாரிப்பது.

(2) நெல் முனையில் இருந்து எண்ணை தயாரிப்பது.

(3) உமியினால் என்ஜின்களை (பாய்லர்களை) ஓட்டச்செய்து மின்சாரம் தயாரிப்பது.

(4) உமியை கறுப்பு உருண்டைகளாக்கி, அடுப்புக்கரி தயாரிப்பது.

(5) உமியில் உள்ள வெள்ளைப்பொருளைப் பிரித்து எடுத்து அதைக்கொண்டு கண்ணாடித் தொழிலுக்குப் பயன்படும் "சிலிகான்பவுடர்" என்ற பொருளைத் தயாரிப்பது.

(6) தவிட்டு எண்ணை தயார் செய்யும்போதுவரும் கழிவுப் பொருளைக்கொண்டு, மெழுகு தயாரிப்பது.

மேற்கண்ட 6 விதமான தொழில்களை தயாரிக்க முடியும்" என்று ஆதித்தனார் தெரிவித்தார்.

அவர் திருவாரூர் சென்றபோது, நகரசபைத் தலைவர்கருணை எம். ஜமால், நகர தி. மு. க. செயலாளர் அப்துல்லா ஆகியோர் வரவேற்றனர்.

Phone : 24544 Post Box No. 1818

# Association Publishing House

'ஆரம்பக் கல்வி' நிலையம்

94/95, New Street, Mannady, Madras-1.

## ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

### இரண்டாம் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·50 | — | — |
| சிறுவர் பூகோளம் | 0·60 | — | — |
| சிறுவர் கணக்கு நூல் | 0·75 | — | — |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·40 | — | — |

### மூன்றாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·60 | — | — |
| சிறுவர் பூகோளம் | 0·60 | — | — |
| சிறுவர் கணக்கு நூல் | 0·87 | 37 | 18—5—66 |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·50 | — | — |

(3-வது பூகோளம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|

### நான்காம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·87 | 11 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 0·62 | 18 | 19—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·25 | 3 | 24—5—67 |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·75 | 6 | 18—5—66 |

(4-வது பூகோளம், சரித்திரம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

### ஐந்தாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 1·00 | 42 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 1·00 | 19 | 18—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·50 | 4 | 17—5—67 |
| சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம் | 1·25 | 9 | 18—5—66 |

# உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

### ஆறும் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மாணவர் வரலாறு | 1·00 | 54 | 18—5—66 |
| புதுமுறை நில நூல் | 2·00 | 13 | 24—4—68 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·50 | 50 | 18—5—66 |
| பொது விஞ்ஞானம் | 1·25 | 25 | 18—5—66 |
| அறிவுச்சுடர் (தமிழ் துணைப்பாட நூல்) | 0·62 | 22 | 18—5—66 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·50 | 49 | 18—5—66 |

ஏழாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·50 | 18 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·50 | 4 | 24—5—67 |
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·75 | 4 | 24—5—67 |
| பொது விஞ்ஞானம் | 1·50 | 15 | 17—5—67 |
| மேனாட்டு இளைஞர் (தமிழ்த் துணைப்பாட நூல்) | 1·00 | 7 | 17—5—67 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·60 | 9 | 17—5—67 |

எட்டாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·80 | 36 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·80 | 40 | 17—5—67 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | 2·00 | 4 | 24—5—67 |
| பொது விஞ்ஞானம் | 2·00 | 4 | 24—5—67 |
| நம் நாட்டு இளைஞர் தமிழ்த் துணைப்பாட நூல் | 1·00 | 7 | 24—4—68 |

## கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா. பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.,

2·00 2 5-7-'61

(ஆசிரியர்களுக்குத் தக்க கமிஷன் உண்டு.)

Association English Primer III Class 0·60
Association English guide IV Class 0·40
Association English guide V Class 0·50

## புதுமுறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 9·00

## HIGH SCHOOLS
உயர்நிலைப் பள்ளிகளுக்கு

## GENERAL SCIENCE
பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஒன்பதாம் வகுப்பு 1·75 38 18-5-'66

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·00 | 56 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·80 | 23 | 24-4-'68 |

## MATHEMATICS

### புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி.,

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·50 | 6 | 24-5-'67 |

### புதுமுறை நிலநூல்

ஆசிரியர் : **R. பத்மநாபன்,** எம்.ஏ., பி.டி.,

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 2·00 | 33 | 7-5-'69 |
| பத்தாம் வகுப்பு | 2·50 | 60 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 3·00 | 28 | 24-4-'68 |

### புதுமுறை வரலாறு

ஆசிரியர் : **வி. எஸ். இராகவன்,** பி.ஏ., பி.டி.,

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 2·00 | 33 | 7-5-'69 |
| பத்தாம் வகுப்பு | 2·00 | 59 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·50 | 24 | 24-4-'68 |

### திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்கள் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.,
புலவர் **தணிகை உலகநாதன்**

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·25 | 45 | 17-5-'67 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|

## TAMIL GRAMMER

### இலக்கணம், கட்டுரை, மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 2·00 | 28 | 7-5-'69 |
| பத்தாம் வகுப்பு | 2·00 | 5 | 24-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·00 | 20 | 25-4-'68 |

## தமிழ்த் துணைப்பாட நூல்

### உரிமைக் குரல்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1·25 | 28 | 7-5-'69 |

### மருத்துவ மேதைகள்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

பதிப்பாசிரியர் : புலவர். தணிகை உலகநாதன்

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 1·25 | 49 | 17-5-'67 |

### உமாபதி உரை நூல்

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0·45 | — | — |
| நான்காம் வகுப்பு | 0·55 | — | — |
| ஐந்தாம் வகுப்பு | 0·65 | — | — |
| ஆறும் வகுப்பு | 1·00 | — | — |
| ஏழாம் வகுப்பு | 1·25 | — | — |

## அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

(ஆரம்பக்கல்வி நிலையம்)

94/95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.